
மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 8 / ஆகஸ்ட் 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## துண்டாடப்பட்ட காசுமீர்



## நோய்களின் பின்புலத்தில் கார்ப்ரேட் கம்பெனிகள்




திராவிடர் கழகத் தலைவர் மானமிகு வீரமணி அவர்களை முற்றம் இதழாசிரியர்
விசவனூர் வே. தளபதி அவர்கள் சந்தித்தார்.



மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly Agust 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்ரோஸ்லின்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

துண்டாடப்பட்ட காசுமீர்
– தலையங்கம்........ 4

அத்தி வரதர் சிறுகுறிப்பு வரைக
–இரா. செந்தில்குமார்........ 8

படைக்கல தொழிற்சாலைகளை கார்ப்பரேஷன்களாக மாற்றும்
முடிவை கைவிட வேண்டும்! – மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்........ 9

சுமித்ராதேவி நாம் பின்பற்ற வேண்டிய பெண்மணி
சைதை மணிமாறன்........ 11

நோய்களின் பின்புலத்தில் கார்ப்ரேட் கம்பெனிகள்........ 13

ஶ்ரீக்குப் பதில் திரு வந்த வரலாறு
– பெரியார் சரவணன் ........15

துப்பாக்கி உரிமம் பெறுவது எப்படி?
– டாக்டர் எஸ். நாகராஜ்........ 18

நீர் மேலாண்மை – இங்கிலாந்து
– ரவி சுந்தரம் ........20

வயிற்று வலி ஒரு பறவை
– மேனாள் மேயர் சா. கணேசன் நினைவலைகள்........ 21

நலம் ........24

தமிழகத்தில் மத்திய அரசு வேலைவாய்ப்புகளில் வடமாநில
இளைஞர்கள் சேர்க்கப்படுவது ஏன்? பின்புல அரசியல்
காரணங்கள் என்ன?........ 25

மனித நேயத்தோடு புலிகளை முஸ்லீம்கள் வெளியேற்றினார்கள்
– உத்தமன் மாஸ்டர் ........26

பெரியார் மண்
கவிஞர் கலி. பூங்குன்றன்........27

அறிவுசார் சொத்துரிமை
– ரா. ராஜ்குமார்........ 29

பல்கலைக்கழகப் பாடத்தில் ஆர்.எஸ்.எஸ். ஆ? ........31

நம்ம ஊர் கபிலர் குன்று பெருமையை தெரிந்து கொள்வோம்........ 33

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.
*– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# துண்டாடப்பட்ட காசுமீர்

நாடு விடுதலை அடைந்தபோது காஷ்மீரை ஆட்சி செய்து வந்த மன்னர் ஹரிசிங், காஷ்மீர் சமஸ்தானம் மற்றும் அங்கு வாழ்கிற மக்கள் நலன் கருதி, சில நிபந்தனைகளின்பேரில், காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க முன்வந்தார். அதற்கு முழுமுதற் காரணமாக இருந்தவர் சேக் அப்துல்லா அவர்கள். அரசர் முடி சூடிய மன்னர், சேக்அப்துல்லா மக்கள் செல்வாக்கு பெற்றிருந்த தலைவர். இவர், நேருவுடன் கொண்டிருந்த சுமூக உறவால், இந்தியாவுடன் இணைந்தது காசுமீரம். இணைவதற்கான நிபந்தனைகளை காசுமீரத் தரப்பு வைக்க, அதை நிறைவேற்ற அரசியல் சாசன சட்டத்தில் திருத்தம் செய்து, பிரிவு 370ன் கீழ் சிறப்பு சலுகைகள் வழங்க உறுதி அளித்து, அதன்பின்னர் இணைப்பு நடந்தது. அரசியல் சாசனத்தின் 35ஏ பிரிவும் காஷ் மீருக்கு சலுகைகளை அளிக்கும் வண்ணமாக சேர்க்கப் பட்டது.

காசுமீரத்திற்கான சிறப்புச் சட்டங்கள் யாதெனில், இந்திய அரசியலமைப்புச் சட்டம், காஷ்மீருக்குப் பொருந்தாது. காஷ்மீருக்கு தனி அரசியல் சட்டம்.

ராணுவம், வெளியுறவு, தகவல் தொடர்புத் துறைகள் தவிர்த்து நாடாளுமன்றத்தில் மத்திய அரசு இயற்றுகிற சட்டங்கள், காஷ்மீர் மாநிலத்தின் சம்மதம் இன்றி இயற்றப்பட்டால் அவை காஷ்மீருக்குப் பொருந்தாது.

மத்திய அரசின் அரசியல் சாசன அதிகாரங்களை, மாநில அரசின் ஒப்புதல் இன்றி காஷ்மீரின்மீது செலுத்த முடியாது.

காஷ்மீரில் நாட்டின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அசையாச் சொத்துகள் வாங்க முடியாது. அதே நேரத்தில் காஷ்மீர் மக்கள், நாட்டில் பிற பகுதிகளில் அசையாச் சொத்துகள் வாங்கலாம்.

காஷ்மீர் பெண்கள், பிற மாநில ஆண்களை மணந்து கொண்டால், அந்தப் பெண்களும் காஷ்மீரில்



அசையாச் சொத்துகள் வாங்க இயலாது. ஆண்கள் காஷ்மீரில் இல்லாமல் பிற மாநிலங்களில் திருமணம் செய்து கொண்டால், அவர்கள் மட்டும் காஷ்மீரில் அசையாச் சொத்துகள் வாங்கலாம்.

காஷ்மீரில் குடியிருப்பவர்களில் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் யார் என்பதை நிர்ணயம் செய்யவும். நிரந்தரமாக குடியிருப்பவர்களுக்கு அரசுத் துறைகளில் வேலை வாய்ப்பு, அரசு உதவித்தொகைகள் வழங்குதல், அசையாச் சொத்துகள் வாங்குதல், விற்றல் போன்ற வற்றில் முடிவு எடுக்கவும் காஷ்மீர் சட்டசபைக்கு அரசியல் சாசனம் பிரிவு 35ஏ அதிகாரம் அளித்துள்ளது.

உலகத்தில் உள்ள சொர்க்கம் காசுமீரம் என்று பேரரசர் அக்பர் கூறினார். அப்படிப்பட்ட அழகிய நாட்டைக் கைப்பற்ற பக்கத்து நாடுகளான பாகிஸ்தான், சீனா தொடர்ந்து முயன்று கொண்டே இருக்கின்றன. அதில் சிறு பகுதிகளை அவைகளும் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றன.

இந்நிலையில், காசுமீரத்தில் யார் வேண்டுமானாலும் நிலம் வாங்கலாம் என்ற நிலை வந்தால் வெளிநாட்டு கார்பரேட் நிறுவனங்களும், இந்தியாவை கைக்குள் வைத்துக் கொண்டு, ஒட்டு மொத்த இந்தியர்களின் வரிப்பணங்களை, வங்கிகள் மூலம் மோசடி செய்து, ஆளும் தரப்பினருக்கு எலும்புத் துண்டுகளைப் போட்டுக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் காசுமீரத்தை ஆக்கிரமிக்கும். தொடர்ந்து பல சிக்கல்களால் காசுமீரம் மட்டுமல்ல, இந்திய ஒன்றியமே பாதிக்கப் படும் ஆபத்து உண்டு.

காசுமீரத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த சிறப்புச் சலுகைகளை நீக்கியிருக்கிறது பாசக அரசு. இதற்கு ஆதரவும் எதிர்ப்பும் இந்திய ஒன்றியத்தில் எழுந்திருக் கின்றன. பாகிஸ்தான், தூதரக உறவுகளை விலக்கிக் கொண்டிருக்கிறது. வணிகத் தொடர்புகளை நிறுத்தியிருக்கிறது. போர் வரக்கூடிய சூழல் உருவாகும். போர்த் தளவாடங்களை வாங்க வேண்டும், அதில் கொள்ளையடிக்க வேண்டும் என்ற எண்ணமும் இந்த சலுகை பறிப்பில் இருக்கிறதோ என்ற ஐயமும் அரசியல் அறிந்தவர்களின் கருத்தாக இருக்கிறது.

ஐநா மன்றத்திற்கு இப்பிரச்சினை கொண்டு போகப்படும். ஒருவேளை ஐநா இச்சிக்கலை கையிலெடுத்து வாக்கெடுப்பு என்ற நிலையைக் கொண்டு வந்தால், காசுமீரத்து மக்கள் தனியாகவோ அல்லது பாகிஸ்தானோடு சென்றால் இந்திய ஆட்சியாளர்கள் முகத்தை எங்கே வைத்துக் கொள்வார்கள்? ●

# நெல்சன் மண்டேலா உரைத்தவை!



தென் ஆப்பிரிக்க முன்னாள் அதிபர் திரு. நெல்சன் மண்டேலா கூறியது:

நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு, நான் ஜனாதிபதியான பின் ஒருநாள் நான் எனது முதல் கட்ட பாதுகாப்புப் படையினருடன் நகரத்தில் உள்ள ஒரு உணவகத்துக்குச் சென்றிருந்தேன்.

அங்கு ஒரு உணவகத்தில் எல்லோரும் அமர்ந்தோம். அவரவர் தமக்கு விரும்பிய உணவுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு அமர்ந்திருந்தோம். அப்போது எனக்கு எதிர் மேசையை கவனித்தேன்.

ஒருவர் தனியாக உணவுக்காக காத்திருந்தார். எனது படைவீரனை அனுப்பி அவரை எம்முடன் வந்து ஒன்றாக உணவருந்தும் படிசொன்னேன். அவரும் தனது உணவுடன் எமது வட்டத்தில் வந்து அமர்ந்து கொண்டார். எல்லோரும் உண்டு முடிய அவரும் புறப்பட்டார்.

எனது படைவீரன் என்னிடம் சொன்னான்...அந்த மனிதர் பார்ப்பதற்கு மிகவும் நோய்வாய்ப்பட்டவராகத் தெரிகிறார். அவர் உண்ணும் போது கைகள் மிகவும் நடுங்கின என்றான்.

நான் குறுக்கிட்டேன்...அது அல்ல உண்மை வீரனே!

உண்மை என்ன தெரியுமா?

நான் முன்னர் சிறையில் இருந்த போது, இந்த மனிதர்தான் எனக்கு சிறைக்காவலராக இருந்தார். என்னை அடிப்படி கொடுமைப்படுத்திக் கஷ்டப்படுத்தும் போதெல்லாம்...

நான் கூக்குரலிட்டு, களைத்து, இறுதியில் கொஞ்சம் நீர் அருந்தக் கேட்பேன்.

இதே அந்த மனிதர், அவ்வேளை என்னிடம் வந்து நேராக என் தலைமேல் சிறுநீர் கழித்துவிட்டுச் செல்வார்.

இப்போது அவர் என்னை இனம் கண்டு கொண்டார், நான் இப்போ தென் ஆப்பிரிக்க அதிபராக இருப்பதால் அவருக்கு பதிலடி கொடுப்பேன் என்று நடுக்கத்துடன் எதிர்பார்த்தார்...


ஆனால் இது எனது பழக்கமல்ல இப்படிப்பட்ட குணம் எனதுமல்ல.

பழிக்குப்பழி வாங்கும் மனநிலை ஒரு போதும் ஒரு தேசத்தையோ, தனி மனிதரையோ தட்டியெழுப்பாது. அழித்துவிடும்.

அதேநேரம் சில விஷயங்களில் மனதின் சகிப்புத்தன்மை பெரிய சாம்ராஜ்யங்களையே உருவாக்கும்...என்றார் மண்டேலா..

# "கும்பல் கொலைகளை தடுத்து நிறுத்துங்கள்"

### டைரக்டர் மணிரத்னம், நடிகை ரேவதி உள்பட 49 பிரபலங்கள், பிரதமருக்கு கடிதம்



மாட்டிறைச்சி வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில், சில குறிப்பிட்ட சமூகத்தினர் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் வடமாநிலங்களில் நடந்து வருகின்றன. இதில், உயிரிழப்புகளும் நிகழ்கின்றன. இந்நிலையில், பிரபலங்கள் பலர் இதற்கு கவலை தெரிவித்துள்ளனர்.

சினிமா இயக்குனர்கள் ஷியாம் பெனகல், அபர்ணா சென், மணிரத்னம், அடூர் கோபால கிருஷ்ணன், அனுராக்காஷ்யப், நடிகைகள், ரேவதி கொங்கனா சென், வங்காள சினிமா ஜம்பவான் சவுமித்ரா சாட்டர்ஜி, பாடகி சுபா முத்கல், வரலாற்று ஆய்வாளர் ராமச்சந்திரா குஹா, சமூக ஆர்வலர் விநாயக் சென் உள்பட 49 பிரபலங்கள், பிரதமர் நரேந்திர மோடிக்கு கூட்டாக ஒரு கடிதம் எழுதி உள்ளனர்.

சமீபகாலங்ளில் கும்பல் கொலைகள் அதிகரித்து வருவது, அமைதியை விரும்பும் எங்களுக்கு கவலை அளிக்கிறது. ஜெய் ஸ்ரீராம் என்பது ஆத்திரத்தை தூண்டும் கூச்சலாகி விட்டது.

ராமர், பெரும்பான்மை சமூகத்தினருக்கு புனிதமா னவர். அவரை மாசுபடுத்த வேண்டாம். மேலும், மாற்றுக்கருத்து இல்லாவிட்டால், ஜனநாயகமே இருக்காது. தேசவிரோதி நகர்ப்புற நக்சல் என்று பல்வாறாக முத்திரை குத்துவதும், அரசுக்கு எதிரான மாற்றுக் கருத்துக்கொண்டவர்களைச் சிறையில் அடைப்பதும் நிறுத்தப்பட வேண்டும்.

கடந்த 2016ஆம் ஆண்டு, பட்டியல் இனத்தவர் மீது 840 தாக்குதல் சம்பவங்கள் நடந்ததாக தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கை தெரிவிக்கிறது.

முஸ்லிம்கள், பட்டியல் இனத்தவர் மற்றும் இதர சிறுபான்மையினரை, கும்பல் கொலை செய்யும் சம்பவங்கள் உடனே நிறுத்தப்பட வேண்டும். இந்த கொலைகளை நீங்கள் நாடாளுமன்றத்தில் கண்டித்து இருக்கிறீர்கள். அது போதுமானதல்ல. இதை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## ஆதிச்சநல்லூர் அகழாய்வில் எடுத்த பொருள் கி.மு. 905-ஆம் ஆண்டைச் சேர்ந்தது

தூத்துக்குடி மாவட்டம் செய்துங்கநல்லூரைச் சேர்ந்த எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், ஆதிச்சநல்லூர், தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க இடம். அங்கிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் தான் பாண்டிய நாட்டின் தலை நகரான கொற்கை அமைந்துள்ளதாக வரலாறு கூறு கிறது. இதனால் இங்கு அகழாய்வுப் பணிகள் கடந்த 2004ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஏராளமான பழங்காலப் பொருட்களும் கண்டெடுக்கப் பட்டன. அங்கு அகழாய்வு நடத்தப்பட்டுள்ளது. இதன் அறிக்கை தற்போது வரை வெளியிடப்படவில்லை. எனவே ஆதிச்சநல்லூர் அகழாய்வு அறிக்கையை உடனடியாக வெளியிடவும். அங்கு மீண்டும் அகழாய்வு நடத்தவும், கண்டெடுக்கப்பட்ட பழங்காலப் பொருட் களை அங்கேயே காட்சிப்படுத்தவும் உத்தரவிட வேண்டும்.

அப்போது மத்திய அரசின் உதவி சொலிசிட்டர் ஜெனரல் கதிர்வேலு ஆஜராகி, கார்பன் சோதனைக் காக அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட 2 பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்டு அதன் முடிவுகள் கிடைத்துள்ளன. அதன்படி, ஒருபொருள் கி.மு.905ஆம் ஆண்டையும், மற்றொன்று கி.மு. 791ஆம்ஆண்டையும் சேர்ந்தது என தெரியவந்துள்ளது. இதுதொடர்பான அறிக்கை தயாரிக்க அவகாசம் வழங்கவேண்டும்" என்றார்.

அதேபோல், "தூத்துக்குடி மாவட்டம் சிவகளை யில் கிடைத்த தமிழ் பிராமி எழுத்துகள் கி.மு. 395ம் ஆண்டு காலத்தை சேர்ந்தவை" என்றும் தெரிவித்தார்.

"கார்பன் பரிசோதனை முடிவுகளின் அடிப்படை யில் ஆதிச்சநல்லூரில் அடுத்தக்கட்ட அகழாய்வு பணியை மத்திய அரசு மேற்கொள்ளுமா? அல்லது மாநில அரசு மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுமா? என்பது குறித்து மத்திய தொல்லியல் துறை, பதில் அளிக்க வேண்டும்" என்று நீதிபதிகள் உத்தரவிட்ட னர்.





# அத்தி வரதர் சிறுகுறிப்பு வரைக

“அப்பா யாரோ, ஏதோ அத்தி வரதராம் அவரைப் பற்றி நாலைந்து வரிகளில் ஏதாவது எழுதி இரண்டு நாளில் கொண்டு வர வேண்டுமாம் சோசியல் மிஸ் சொன்னாங்க“ என்றதும் எனக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை.

எவ்வளவு எளிதாக வீட்டிற்கள் நுழைகிறார் இந்த ஆரிய அத்திவரதர். நேற்று மனைவியின் ஆச்சரிய வீதிக் கதைகளாய் காதில் நுழைந்தவர் இன்று மகனின் கல்வி வழியே தலைமுறையைத் திருடிட வருகிறார்.

ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது இனி கல்வியும் அதிகார மையங்களும் ஆரியத்தின் ஆன்மீக விதைப் பிற்குத்தான் இருக்கின்றன என்பதை நாம் முகநூலில் பேசிக் கொண்டிருக்க அவர்கள் முகங்களோடு பேசுகிறார்கள். அதுவும் நம் வீட்டு மழலைகளின் வெள்ளைத்தாள் மனங்களில் அவர்களின் ஆன்மீக அழுக்குகளை கிறுக்கியபடி இருக்கிறார்கள்.

சோட்டா பீமையும், கிருஷ்ணா வையும் அவர்கள் உதடுகள் உச்சரிப் பது உள்ளத்தில் விதைத்த கிறுக்கல் களால்தான்.

யாரிந்த அத்திவரதர், பெரிதாய் தேடலின்றி வழக்கமான ஆரிய கடவு ளர் கதையாகவே விடை கொண்டு நின்றான். குளத்தில் மூழ்கி இருப்பா னாம். நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை மேலே வந்து மக்களை காப்பா னாம். அந்த நாற்பது ஆண்டிற் குள் ஒரு தலைமுறை அழிக்கப்பட்டு விடும் என்பதை அறியாத அத்திவரதர் எந்த மக்களை காப்பாற்றுவான். தன் கதைக்கு உயிர் தந்த பார்ப்பனக் கூட்டத்திற்கு மட்டும் தட்டு நிறைய காசுகளைத் தருவான்.

இடைநிலை ஊர்த் தெருவுக்கும், ஒடுக்கப்பட்ட சேரிக்கும் பிள்ளை யாயர் மற்றும் ஐபிஎல் விளையாட் டைத் தந்துவிட்டு, உலக வர்த்தகத் திற்கு பூணூலால் ஆன இந்திய ஆட்ட மும், ஆட்சிக்கு பூணூல் அணிந்த இராமனையும் வைத்திருப்பது போல மேலுமொரு பார்ப்பனக் கடவுள் அடையாளமே அத்தி வரதன்.

அனைத்து அறிவியலும் வளர்ந்து நமது கைகளில் தவழ்ந்திடும் இந்த அறிவியல் காலத்தில் கூட அத்தி வரதன் கதைக்கு உயிர் தர முடிகிற தென்றால், ஆத்திச் சூடியில் ஆரிய ஆன்மீகம் விதைக்க முடிகிற தென்றால் நம் முன்னோர்கள் ஒன்றும் முட் டாள்கள் இல்லை. அந்தக் காலத்தில் வினாயகனையும் விஷ்ணு வையும் எவ்வளவு எளிதாக கொண்டு சேர்த்திருப் பார்கள்.

நாம் முகநூல் பகடியில் திராவிடம் பேசிக் கொண் டிருக்கிறோம். அவர்கள் அவர்களுக்கே உரிய பின் வாசல் குணத்துடன் மழலைகளின் மனதில் நுழை கிறார்கள் தலைமுறை அறியாமைகளின் தேவை கருதி.

இன்று இந்திய ஒன்றியமே காவி மயமான போதும், நாம் தனித்துத் தெரிவது கல்வியைப் பெற்றதால்தான். அதனால்தான் ‘நீட்’ கொண்டு அதைப் பறிக்கிறார்கள். இன்று மழலைகளிடமே அறிவியல் அழித்து ஆன்மீகம் விதைக்கிறார்கள்.

உடலை விழுங்கிய ஆரிய பாம்பு தலையை விழுங்க படாத பாடு படுகிறது. அதற்கு தெரிந்திருக்கிறது தலை தான் சிந்திக்கும் மூளையை அடக்கிய பகுதியென்று. அதனால் சிந்திக்கச் சொல்லும் கல்வியில் விசம் கக்குகிறது.

நாலு வரிக்கு மிகாமல் எழுதச் சொன்ன மகனிடம் நான்கு நாளாக பேசிக் கொண்டு இருக்கிறேன்.

அதன் சிறு குறிப்பு அத்தி வரதன் இந்து மதத்தின் மேலுமொரு கடவுள் கதை. கடலில் போட்டால் கட்டை மிதக்கும் மூழ்காதென்று குளத்தில் போட்டு புதைத்து சேலை கட்டி மீண்டும் வெளியே எடுக்கும் பிழைப்புவாதமே அத்தி வரதன். அறிவியல் படி, கட்டை மூழ்கி நாற்பது ஆண்டுக்கொருமுறை நீந்தி வெளியே வர வாய்ப்பில்லை. அதை யாராவது கயிறு கட்டி தூக்கி வர வேண்டும். அந்தக் கயிறு இங்கு வெள்ளி நிறத்தில் பூணூலாக உள்ளது. இந்தக் கதையில் உன் அறிவுக்கு எட்டியதை அறிவியலோடு அலசி கேள்வி கேட்டு விடை தேடிக்கொள் என்று.

முன்பு பிள்ளைகள் கற்க வேண்டுமென கண் காணிப்பாய் இருந்தோம். இனி என்ன கற்பிக்கப்படு கிறது என்பதிலும் கண்காணிப்பாய் இருப்போம்.

ஆரியம் கிடைத்ததை எல்லாம் ஆயுதமாக்கிக் கொள்கிறது கொல்கிறது.

ஆயுதமே கிடைத்தாலும் நாம் ....? ஆய்வில் வைப்போம்.

இதை அறிந்துதான் அவர்கள் நம்மை சாதியால் பிளவுபடுத்தி வைத்திருக்கிறார்கள்.

ஒற்றுமையே விடை என்பதை உணர்ந்து மூல எதிரி பார்ப்பனீயமே என்பதை உணராத சூத்திரன் சூத்திரனாகவே ஒடுக்கப்பட்டவன் ஒடுக்கப்பட்டவ னாகவே தொடர்வான்.

இந்தப் பிளவு தொடர்ந்தால் நாம் பிள்ளை நம்மிடமே வந்து டாக்டர் அம்பேத்கர் புகைப்படத் திற்கும், தந்தை பெரியார் புகைப்படத்திற்கும் நடுவில் கிருஷ்ணா ஸ்டிக்கரை ஒட்டச் சொல்லுவான்.

**இரா. செந்தில்குமார்.** (முகநூல் பதிவு) •


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-


## ஆசையின் அருகில் ஆபத்து

ஆசை அதிகம் கொளல் தீது
அழிவை அளிக்கும் ஆசைவிடு
ஆசை அடக்கிய சித்தார்த்தன்
அகிலம் வணங்கும் சிலையானார்
ஆசை கொண்ட அரக்கர்களும்
அழிந்தார் என்பது புராணங்கள்
ஆசையில் பலபேர் அழிவதையே
அவரவர் வாழ்வில் காண்கின்றோம்
உன்னுள் தோன்றும் ஆசைகளை
ஒதுக்கித் தூர எறிந்துவிடு
இன்னால் தந்திடும் எண்ணங்களை
என்றும் தள்ளியே வைத்துவிடு.

எண்ணிலா ஆசை கொண்டோர்க்கு
என்றும் நிம்மதி கிடைப்பதில்லை
மண்ணில் வாழ்வது சிலகாலம்
மனிதனாய் வாழ்ந்து பார்ப்போமே
மண்மேல் ஆசை கொண்டவரோ
மரணம் தழுவி ஏற்கின்றார்!
பெண்பால் கொண்ட ஆசையினால்
பிணமாய்த் தரையில் வீழ்கின்றார்!

ஆசை தவிர்த்து வாழ்ந்திட்டால்
அகிலம் நம்மைப் போற்றிடுமே
ஆசைகள் நம்மை ஆட்கொண்டால்
அழிவை நோக்கித் தள்ளிவிடும்
ஆசைகள் இல்லா உலகிற்கு
அடித்தளம் அமைத்திட வாருங்கள்!
ஆசைகள் இல்லா மனிதரில்லை
அளவாய்க் கொள்வோர் அழிந்ததில்லை!

போதும் என்றொரு மனமிருந்தால்
பொருளும் புகழும் தானேவரும்
யாதும் எனக்கே என்றானால்
எமனின் வாசல் திறந்திடுமே
ஏதும் எனக்குச் சொந்தமில்லை
என்றொரு நிலையில் நாமிருந்தால்
சாதுவ னாகவே வாழ்ந்திடலாம்
சந்ததி திருந்தவும் வழியாகலாம்.

கவிஞர் **இராமன்,**
சென்னை 24.

தமிழகத்தில் உள்ள 6 படைக்கலத் தொழிற்சாலைகள் உள்பட நாடு முழுவதும் உள்ள மொத்தம் 41 படைக்கலத் தொழிற்சாலைகளை கார்ப்பரேஷன்களாக மாற்றியமைத்து, தனியாரிடம் தாரை வார்க்கும் மத்திய பா.ஜ.க. அரசின் முயற்சிக்கு, தி.மு.க. சார்பில் கடும் எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தொழிற்சாலைகள் இந்திய ராணுவத்துக்கும், துணை ராணுவத்துக்கும்,போர் வாகனங்கள், கனரக பீரங்கிகள், இலகு ரக நடுத்தர துப்பாக்கிகள், வெடி பொருட்கள், பாராசூட் மற்றும் சிப்பாய்களுக்கான உடைகள் உள்ளிட்டவற்றை குறிப்பிட்ட தரத்துடன் தொடர்ந்து தயாரித்து வழங்கி, சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

41 படைக்கல தொழிற்சாலைகளிலும், 85 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரி கிறார்கள் என்பதோடு, அவை ரூ.20 ஆயிரம் கோடிக்கும் அதிகமான மதிப்பில் உபகரணங்களையும், உடைகளையும் உற்பத்தி செய்கின்றன. ஆனால் மத்திய அரசு அவ்வப்போது இந்த தொழிற்சாலைகளை தனி யார் மயமாக்கும் முயற்சியில் ஈடுபடும்போ தெல்லாம், திருச்சி படைக்கலத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்களும், கூட்டு நடவடிக்கை குழுக்களும் கடுமையாக எதிர்த்து வந்திருக்கின்றன.

முன்னாள் ராணுவ மந்திரிகள் மறைந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் மனோகர் பாரிக்கர் ஆகியோர் இந்த படைக்கல தொழிற்சாலைகள் தனியார் மயமாக்கப்படமாட்டாது என்று எழுத்துப் பூர்வமான உத்தரவாதங்களை நாடாளுமன்றத்தில் கொடுத்துள்ளார்கள். இது போன்ற சூழ்நிலையில் மீண்டும் இந்த 41 படைக்கல தொழிற்சாலைகளையும் கார்ப்பரேஷன்களாகவோ அல்லது வர்த்தக ரீதியி லான நிறுவனங்களாகவோ மாற்றிவிட முயற்சி களை மேற்கொண்டுள்ளது மத்திய மந்திரிகளே கொடுத்த வாக்குறுதிகளுக்கு முற்றிலும் எதிரானது.

தொடர்ந்து தனியார் மயத்தில் அதீத ஆர்வம் காட்டி வரும் மத்திய பா.ஜ.க.அரசு, படைக்கல தொழிற்சாலைகளையும் தனியாருக்கு தாரை வார்ப்பது நாட்டின் பாதுகாப்புக்கு மிகவும் அபாயகரமான போக்கு என்பதையும், தமிழ் நாட்டிலும் நாடு முழுவதிலும் உள்ள 85 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களின் வேலை வாய்ப்புக்கும், இந்த தொழிற் சாலைகளை மறைமுகமாக நம்பியிருக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கும் மிகப்பெரிய அச் சுறுத்தலாகவும், ஆபத்தாகவும் மாறிவிடும் என்பதை மத்திய பா.ஜ.க. அரசு உணர வேண்டும்.

**தொடர்ந்து செயல்பட நடவடிக்கை**

ஆகவே படைக்கல தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து தமிழகத்திலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 41 படைக்கல தொழிற்சாலைகளை கார்ப்பரேஷன்களாக மாற்றும் முடிவை மத்திய அரசு உடனே கைவிட வேண்டும். இந்த தொழிற்சாலைகளை மேம்படுத்த தேவையான நவீன சீர்திருத்தங்கள் செய்ய தொழிலாளர்களும், ஊழியர்களும் தயாராக இருப்பதால் அவர்களுடன் கலந்து பேசி, நியாயமான சீர்திருத்தங்களை மேற்கொண்டு, 41 தொழிற்சாலை களும் மத்திய அமைச்சகத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்து செயல்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று அறிக்கையில் மு.க.ஸ்டாலின் கூறியிருக்கிறார்.





# ஓய்வறியா சூரியன்

திருவாரூரில் பிறந்து
சிறுவயது முதலே
போராட்டக் களத்திற்கு
தன்னை அர்ப்பணித்தவர்
பெரியாரின் சீடராகவும்
அண்ணாவின் தம்பியாகவும்
அரசியலில் வலம் வந்து
சாதனைகள் பல செய்தவர்
கழகத் தொண்டர்களை
தம்பிகளே என்று
பாசத்துடன் அழைப்பவர்
உரிமையுடன் பேசிப் பழகும்
தன்மை உள்ளவர்
உதயசூரியனை
ஒளிரச் செய்தவர்
அரசியல் சாணக்கியர்
வழிமுறைகள் சொல்லும்
தலைவராக பெயர் பெற்றவர்
பதவியில் இருந்தாலும்
இல்லாது போனாலும்
இந்திய அரசியலில்
தனி முத்திரை பதித்தவர்
சிறுபான்மையினரின் நலன்
அக்கறை கொண்டவர்
நாடக நடிகராகவும்
வசன கர்த்தாவாகவும்
தன்னை உயர்த்திக்கொண்ட
உத்தமத் தலைவர்
சூரியன் மறைந்து விட்டதாக
சுவெராட்டி ஒட்டுகிறார்கள்
பலரின் நெஞ்சங்களில்
ஒளியாக இருக்கிறார் அவர்
மறைந்தும் மறையாத
வரம் பெற்றவர் கலைஞர்
பல கலைகளில்
முதன்மையாகத் திகழ்ந்ததால்
கலைஞர்
என்று பெயர் பெற்றார்
இன்றும் கலைஞராகவே
வாழ்ந்து கொண்டிருக்கிறார்
வாழ்க அவர் புகழ்!

**வாணியம்பாடி தியாகராஜன்.**



# சுமித்ராதேவி நாம் பின்பற்ற வேண்டிய பெண்மணி

சா ர்கண்ட் மாநிலத்தில் ராஜ்புரா நகராட்சியில் சாதாரண துப்புரவுத் தொழிலாளியாக வேலை செய்த ஒரு பெண்மணி, கணவரை இளமையில் இழந்த நிலையிலும் தனது மூன்று மகன்களையும் முறையே மாவட்ட ஆட்சித் தலைவர், தொடர்வண்டி பொறியாளர், மருத்துவர் என்று உருவாக்கி உழைப்பால் உயர்ந்திருக்கிறார்.

சுமித்ராதேவி அகவை அறுபது. இவர்தான் அந்த ஒப்புமை இல்லாத தாய். ராஜ்புரா நகராட்சியில் பணிபுரிந்த அவருக்கு பணி நிறைவு பாராட்டுவிழா ஏற்பாடு செய்திருந்தார்கள் உடன் பணியாளர்கள்.

பாராட்டு விழா நடைபெறும் முப்பது நிமிடத்திற்கு முன்பு வரை, ஆட்சித் தலைவர் பொறியாளர், மருத்துவரின் தாய் இவர் என்பது யாருக்கும் தெரியாது.

விழா தொடங்குவதற்கு அரை மணி நேரம் இருக்கும்போது சைரன் ஒலிக்க ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து பீகார் மாநிலம் சிவாஞ்சலி மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் மகேந்திரகுமார் இறங்கினார். அவரை அங்கு இருந்தவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

அடுத்த சில நிமிடங்களில் இன்னொரு காரில் தொடர்வண்டி பொறியாளர் வந்து இறங்கினார். அடுத்து மருத்துவர் வந்திறங்கினார். மூவரையும் விழா அமைப்பாளர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்று மேடையில் அமர வைத்தார்கள். ஒரே நேரத்தில் பெரிய பதவிகளில் இருக்கும் மூவர் விழாவிற்கு வந்திருப்பதைக் கண்டு பார்வையாளர்கள் வியப்போடு பார்த்தனர்.

“முப்பது ஆண்டுகள் சுமித்ராதேவி பணிபுரிந்து இருக்கிறார். கடமையில் அர்ப்பணிப்போடு இருந்திருக்கிறார். எந்த ஒரு புகாரும் இல்லாமல் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார். அவரைப் போல ஒரு தொழிலாளி கிடைப்பது என்பது அபூர்வம்“ என்று நகராட்சி நிருவாகிகள் மனம் திறந்து பாராட்டினார்கள்.

ஆட்சித்தலைவர் மகேந்திரகுமார் பேசத் தொடங்கினார். கடந்த 30 ஆண்டுகளாக ஒரு பெண்மணி, அதுவும் ஒரு பெண் துப்புரவுத் தொழிலாளி தன்னுடைய கடுமையான உழைப்பின் மூலம், அதில் கிடைத்த சொற்ப சம்பளத்தை வைத்து குடும்பத்தையும் நடத்திக் கொண்டு சமுதாயத்தில் 3 பேரை உயர்த்தி, உயர்ந்த பொறுப்பில் அமர வைத்து இருப்பது என்பது மகிழ்ச்சிக்குரியது. பெருமைக்கு உரியது’’ என்று குறிப்பிட்டார்.

இப்படி அவர் பீடிகையோடு துவக்கிய பேச்சை பார்வையாளர்கள் கூட்டம் உன்னிப்பாகக் கேட்க ஆரம்பித்தது. அவர் தொடர்ந்து பேசுகையில், தான் ஒரு துப்புரவுத் தொழிலாளியாக இருந்தாலும் கொடுத்த பணியை, நேசித்து நேசித்துச் செய்தார். கடமை உணர்வோடு பணியாற்றினார். தன்னுடைய நலனை எல்லாம் குறைத்துக் கொண்டு, படிப்பு ஒன்றே குறியாக இருக்க வேண்டும் என்றும் மகன்களை படிக்க வைத்தார். சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு



வரவேண்டும் என்று ஒரு வைராக்கிய வெறியுடன் இறங்கினார். அவரின் எதிர்பார்ப்புக்கு கொஞ்சமும் குறை வைக்காமல் 3 பேரும் படித்தார்கள். வாழ்க்கையில் உயர்ந்தார்கள். அவர்களை உயர்ந்த இடத்தில் உட்கார வைத்தார். அவர்கள் தான் நாங்கள்" என்று தொடர்ந்து பேசி நிறுத்திய போது அரங்கில் பலத்த கைதட்டல் எழுந்தது.

இதுவரை வெளி உலகத்திற்கு 30 ஆண்டுகளாக வராத ஒரு ரகசியத்தை, உண்மையை உங்களிடம் சொல்கிறேன். அந்தக் கலெக்டர் நான்தான். தொடர்வண்டி பொறியாளர் இவர், இவர் மருத்தவர். பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

அடுத்த நிமிடம் மூன்று பேரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்து எழுந்து நின்று, இந்தச் சபைக்கு அந்த உண்மையைச் சொல்கிறோம். "அந்தத் தாயின் மகன்கள் தான் நாங்கள்" என்று சொன்னதும் அரங்கமே உணர்ச்சிப் பிழம்பாய் மாறியது. பார்வையாளர்களின் விழியோரம் ஆனந்தக் கண்ணீர். அத்தனை பேரும் அசந்து போனார்கள். எழுந்த கைதட்டல் அடங்குவதற்கு 120 வினாடிகள் பிடித்தது.

செய்யும் தொழிலை தெய்வமாக நினைத்து செயல்பட்டவள்தான் எங்கள் தாய். துப்புரவுத் தொழிலாளி என்றாலும், அது தரக்குறைவான பணி என்று உதறித் தள்ளவில்லை. எங்களிடம் அந்த வேலையைப் பற்றிச் சொன்னதும் நாங்களும் அவர்களை வேலை யிலிருந்து விலகிவிடுமாறு சொல்லவில்லை. விடுங்கள் என்று வற்புறுத்தவில்லை. அவர்களும் வேலையைத் தொடர்ந்தார்கள் எங்களைப் படிக்க வைத்தார்கள். நாங்கள் இந்த நிலைக்கு உயர்ந்துள்ளோம். அவர் வாழ்க்கையில் எத்தனையோ தியாகங்களைச் செய்து எங்களைக் கரையேற்றி இருக்கிறார்கள். அவர், எங்கள் பார்வையில் வெறும் தாய் அல்ல, உண்மையிலேயே தெய்வத்தாய் என்று சொல்லி நிறுத்தியபோது பார்வையாளர்கள் மீண்டும் எழுந்து கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

தனக்கு மூன்று மகன்கள் இருக்கிறார்கள், அவர்கள் மூவருமே உயர் பொறுப்பில் அந்தஸ்தில் இருக்கிறார்கள் என்பதை வெளி உலகத்திற்கு, ஏன் உடன் வேலை பார்க்கும் சக ஊழியர்களுக்குக் கூட சொல்லாமல் கடமையில் அர்ப்பணிப்போடு இருந்து குடும்பத்தைக் கரையேற்றி இருக்கும் சுமித்திரா தேவியினுடைய அந்த எளிமையை, பண்பை, பாசத்தின் உச்சத்தைக் கேட்டு, ஒட்டு மொத்த அரங்கமே மகிழ்ச்சியில் நெகிழ்ச்சியில் திளைத்தது.



**சைதை மணிமாறன்**

நல்ல வேலையில், கணவன் மனைவி இருவரும் இருந்தும்கூட, ஒரு குழந்தையைப் பெற்று அவர்களைப் படிக்க வைப்பதற்குள் விழி பிதுங்கி விடும் கால கட்டத்தில், செய்யும் வேலை இன்னதென்று கண்டு கொண்டிருக்காமல், தொழிலை மதித்து, குடும்பத்தை உயர்த்திய தாய் சுமித்ரா தேவி, மாதர்குல மாணிக்கம் என்றும் பாராட்டுக்கு உரியவர். ●



# விவசாயக்குடி ஒழியுமே!

**சோ**லையில் இருப்பது
பாலையில் இல்லையோ?
விளைநிலத்தில்தான்
விலைபோகும்
ஹைட்ரோ கார்பனெனும்
தீங்கும் இருக்குமோ?

பச்சை போர்த்திய நந்தவனம்
நாளை
பாலைவனம் ஆகுமே!
பசுமை அழிந்தால்
பஞ்சம்வர நேருமே!
மண் மலடானால்!
விவசாயி முதுகு வளையுமே!
விவசாயக்குடி ஒழியுமே!

பணம் காசிருக்கும்
பகட்டான வாழ்விருக்கும்
பசி தீர்ப்பது யாரோ?
கார்ப்பரேட்காரர்களின்
காப்ஸ்யூல்ஸ்கள்தான்
இறுதியில் தீர்வோ?!

**சக்திபிரியன்**
**ர. அகோரமூர்த்தி**,
1/453, ஐயனார் கோவில் தெரு,
இலையமுதுகூடம்,
இராதா நல்லூர் அஞ்சல்
சீர்காழி தாலுகா,
பூம்புகார், 609 114.
அலைபேசி : 9715958007.

உங்க வீட்டு இறைச்சி எத்தனை நாளுக்கு ஒரு தடவை எடுப்பாங்க? எங்கண்ணே மாசத்துக்கு ஒரு தடவைதான்.

மாசத்துக்கு ஒரு தடவை சாப்பிடுற உடம்புக்குள்ள எப்படிடே கொழுப்பு சேரும்? கோழிக்கறியும் இறைச்சியும் சாப்பிடாம எப்படிடே சுகர் வருது.

பணக்காரர்களுக்கு மட்டும் வந்துட்டு இருந்த வியாதி இப்போ, கூழும் கஞ்சியும் குடிக்கிற அண்ணா டங்காச்சிக்கு எப்படி வருது?

ஆமாண்ணே எப்படிண்ணே?

உன்னோட உடம்புல சேர்ற கொழுப்பு இறைச்சி யினால வரக்கூடியது கிடையாது. எண்ணெய்னால வரக்கூடியது. என்னாண்ணே சொல்றீங்க?

ஆமா உன்னோட வீட்ல சமையலுக்கு என்ன எண்ணெய் வாங்குற? பொறிச்சாலும் எண்ணெயின் நிறம் மாறவே மாறாத சூரியகாந்தி எண்ணேய் தாண்ணே.

நீ மட்டும் இல்ல முருகா, இந்தியாவுல இருக்கிற, குறிப்பா தமிழகத்துல இருக்கிற ஆறரைக்கோடி மக்கள்ல, 5 கோடி மக்கள் சூரிய காந்தி எண்ணெய் தான் பயன்படுத்திட்டு வர்றாங்க.

ஒரு நாளைக்கு தமிழ்நாட்டுல பயன்படுத்தக்கூடிய சூரியகாந்தி எண்ணெயின் அளவு (வீடு மற்றும் ஓட்டல் மூலமாக) ஒரு கோடி லிட்டருக்கு மேல்.

நல்ல விசயம்தானண்ணே!

சூரியகாந்தி எண்ணெய் உடம்புக்கு நல்லதுன்னு நான் இணையத்துல கூட படிச்சிருக்கேண்ணே.

உன்னோட மேதாவித்தனத்துல தீய வைக்க. சூரிய காந்தி எண்ணெய் உடம்புக்கு நல்லதுன்னு படிச்ச நீ, சூரியகாந்தியோட உற்பத்தி அளவை என்னிக்காவது படிச்சிருக்கியா?

உலகத்துல ஒரு சில நாட்டுல மட்டும்தான் சூரிய காந்தியை பயிரிடுறாங்க. அது மட்டுமல்லாம, அப்படி பயிரிட்டு கிடைக்கிற சூரியகாந்திப் பூவிலிருந்து சென்னையில அயனாவரத்துக்குக் கூட எண்ணெய்



# நோய்களின் பின்புலத்தில் கார்ப்ரேட் கம்பெனிகள்

சப்ளை பண்ண முடியாது. அப்படியிருக்கும்போது, கோடி கோடி லிட்டர் சூரியகாந்தி எண்ணெய் எங்கிருந்து வருது?

என்னாண்ணே அதிர்ச்சியா இருக்கு? அப்போ அந்த எண்ணெயெல்லாம் எங்கிருந்துண்ணே வருது?

ம்... குரூட் ஆயிலிலிருந்து. அது பேரு மினரல் ஆயில். ஏண்ணே ரோடு போட்றதுக்கு யூஸ் பண்ணக் கூடிய தார் கூடி குரூட் ஆயிலிலிருந்துதானே எடுக்கு றாங்க?

கரெக்டா சொன்னே, அந்த தாருக்கு முந்தைய கட்டத்துலதான், நீ நெனச்சுட்டு இருக்கிற சூரியகாந்தி எண்ணெயும் எடுக்குறாங்க.

அந்த குரூட் ஆயிலை பலமுறை சுத்திகரிப்பு செய்த பிறகு, அதுல நறுமணம் எல்லாம் மிக்ஸ் பண்ணி, நடக்குற பெரிய மோசடியிலதான், நாம சிக்கன் பொறிச்சுச் சாப்பிட்டுட்டு இருக்கோம்.

எல்லாத்துக்கும் வரிஞ்சுக்கட்டிட்டு வருவியே முருகா, நீ வாங்குற சூரிய காந்தி எண்ணெய் பாக் கெட்ல அந்த எண்ணெய்ல என்னவெல்லாம் கலந்துருக்கும்னு நீ பார்த்திருக்கிறாயா?

இல்லண்ணே.. பாரு உண்மை புரியும்.

ஆமாண்ணே, அது சாப்பிட்டாதான் சுகர் வரும்னு லேப் டெஸ்ட் பண்ணிப் பாத்தீங்களா?

டேப் டெஸ்ட்லாம் வேண்டாம். உன் வீட்டு அடுப்பங்கறைக்குப் போ. அந்த சூரியகாந்தி எண்ணெய் ஊத்தி வச்சிருக்கிற பாத்திரத்தைப் பாரு.

என்ன தெரியும்? ம். பாத்திைத்தோட வெளிப் புறத்தைப் பாரு கொழுப்புப் படிஞ்சி பிசுபிசுன்னு இருக்கும்.

அந்த மாதிரி எண்ணெய் ஊத்தி வைக்கிற பாத்திரம்கூட ஒரு ஆண்டுல கெட்டுப் போகு துண்ணா மனுசன் நிலைமைய கொஞ்சம் யோசிச்சுப் பாருடே.

ஏண்ணே எங்க வீட்ல பிராண்டட் நல்லெண் ணெய், கடலை எண்ணெய் ஊத்தி வைக்கிற பாத்திரமும் அப்படித்தாண்ணே இருக்கு.

முருகா, சூரியகாந்தி எண்ணெய் மட்டும் இல்ல, நீ யூஸ் பண்ற பாக்கெட்டுல வரக்கூடிய எண்ணெய் எல்லாம் குரூட் ஆயிலோட ஒரு பரிணாமம்தான்.

அப்போ நான் சாப்பிடவே முடியாதாண்ணே! ஏன் முடியாது. பொறிக்கறதுக்கு கடலை எண்ணெய் வாங்கு. சமையலுக்கு நல்லெண்ணெய் வாங்கு.

எங்க போய் வாங்குறது? யாரை நம்பி வாங்குறது? யாரையும் எவனையும் நம்ப வேண்டாம். நல்லெண் ணெய் வேணும்னா, நாலு கிலோ எள்ளு வாங்கிக்கோ, கடலை எண்ணெய் வேணுமா? கடலை 4 கிலோ வாங்கிக்கோ. செக்கு உன் ஏரியாவுல எங்க இருக்குன்னு தேடி கண்டுபிடி. என் ஏரியாவுல இல்லையா, வேற ஊருக்குத்தான் போகணுமா ஒரு நாள் ஆபிஸ் லீவ் நாள்ல மாலுக்குப் போறத நிறுத்திடு. செக்குல போய் எண்ணெய் ஆட்டி வாங்கிட்டு வா. அந்த எண் ணெய்யை பயன்படுத்திப் பாரு, ஆரோக்கியம் தானா வரும்.

ரெண்டு லிட்டர் எண்ணெய்க்காக பல ஊருக்குப் போகச் சொல்றீங்கலாண்ணே. நீ ஆரோக்கியமா இருக்கணும்னா இதை செஞ்சு தான் ஆகணும்.

இல்லாட்டி, பேய் வரக்கூடிய நேரத்துல இப்படி அரைக்கால் டவுசரை மாட்டிட்டு, நாய்க்குப் போட்டியா கிரவுண்டுல நடக்க வேண்டியதுதான்.

ஏண்ணே கடலை எண்ணெய் கொழுப்பு இல்லையா? கடலை எண்ணெய் கொழுப்புண்ணு இந்த கார்ப்பரேட் காரங்கதான் பரப்பி விட்டது.

கடலை எண்ணெய்ல இருக்கிறது 5 விழுக்காடு கொழுப்புன்னா, நீ பயன்படுத்துற சூரியகாந்தி எண்ணெய்ல இருக்குறது 99.9 விழுக்காடு மறைமுகமா இருக்கு கொழுப்பு.

ஏண்ணே கவர்மெண்ட இதையெல்லாம் தட்டிக் கேட்காதாண்ணே.

டேய் தம்பி, இந்தியா கார்பரேட் காரங்களோட சொர்க்க பூமி, இங்க நீயும் நானும் வருமான பிரதி நிதிங்க அவ்ளோதான்.

கார்ப்போரேட் கம்பெனி ஒவ்வொன்னையும் இப்படி தட்டிக் கேட்டுக்கிட்டே இருந்தா கவர் மெண்டை எப்படி நடத்துறது.

போய் செக்கு எங்க இருக்குன்னு பார்த்து உன்னோட உடம்பை முதல்ல பாரு.



இன்னிக்கு பச்சை புள்ளைங்களுக்கெல்லாம் சுகர் இருக்கு. எல்லாம் இந்தப் படுபாவி கார்பரேட் காரங் களோட பணத்தாசை. நமக்கே தெரியாம நம்ம புள்ளைங்களுக்கு விசத்தை கொடுத்துக்கிட்டு இருக்கோம்.


இங்க இயற்கை மாறல. மாறினது நீயும் நானும்தான். இங்க சுகர்ங்கற வியாதி, வியாதியே இல்ல. அது கார்ப்போரேட் எண்ணெய் கம்பெனிகளின் சதி. இதுக்குப் பின்னாடி மரந்து வர்த்தகம்னு மாபெரும் மார்க்கெட் ஒழிஞ்சிக்கிட்டு இருக்குடே

இதெல்லாம் டிவி.யே கதின்னு கிடக்கிற மக்களுக்கு எப்ப தெரியப்போவுதோ?

•

# ஸ்ரீ க்குப் பதில் திரு வந்த வரலாறு









தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட தந்தை பெரியார் அவர்கள் அரசுக்கு ஒரு கோரிக்கை வைத்தார்.

அரசு தொடர்பான ஆவணங்களில் மக்களின் பேருக்கு முன்னால் ஸ்ரீ எனும் மதிப்பு சொல்லுக்கு மாறாக 'திரு' என்னும் தமிழ்ச் சொல்லை பயன்படுத்த வேண்டும் என்பதே அந்த கோரிக்கையாகும்.

பெரியாரின் கோரிக்கையை ஏற்று அரசு கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டது 1131942 இல் இந்தியரின் பெயர்களுக்கு முன்னால் ஸ்ரீ எனும் உத்தியோக முறையில் எழுதும் கடிதங்களில் திரு என்று உபயோ கிக்க வேண்டும் என்று. இதுபற்றி தமிழர்களின் கருத்து என்ன என்பதை சர்க்கார் தெரிந்து கொள்ள விரும்பியது.

எனவே ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் சென்னை சர்க்காரின் பிரதம காரியதரிசிக்கு தங்களின் அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்ளலாம் என்று ஒரு கருத்துக் கேட்வு அறிவிப்பை அரசு வெளியிட்டது.

அதற்கு தந்தை பெரியார் அவர்கள் விடுதலையில், மக்களுக்காக ஒரு கோரிக்கையை முன் வைத்தார்.

இப்போது சென்னை சர்க்கார் மாறுதல் செய்யும் விசயத்தில் பொதுமக்களிடம் அபிப்பிராயம் அறிய விரும்புகிறார்கள்.

தாங்கள் தங்கள் ஊரில் உடனே ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்து, அந்தப் படி கோரிக்கையை தீர்மானமாக நிறைவேற்றி அதை சர்க்கார் சீஃப் செகரட்டரி, மதராஸ் கவர்ன்மெண்ட், மதராஸ். என்ற விலாசத்திற்கு அனுப்பிக் கொடுத்து விடுதலைக்கும் தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இது அவரசமான காரியமாகும், மற்றும் தங்கள் ஊரில் வேறு சங்கங்கள் இருந்தாலும் அதன் மூலமாகவும் தீர்மானம் அனுப்பலாம். (விடுதலை 1231942)

பெரியாரின் வேண்டுகோளை ஏற்று, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் வாலிபர் சங்கம், சுயமரியாதை சங்கம், ரெட்டி மகாஜன சங்கம், காங்கிரஸ் கமிட்டி, பொது ஜன வாசகச் சாலை, உண்மை விளக்கம், ராணி மங்கம் மாள் பேட்மிட்டன் கிளப், வர்த்தக தொழிலாளர் சங்கம் ஆகிய பல்வேறு அமைப்புகள் 'திரு' வை வரவேற்று தனித்தனியாக தீர்மானம் நிறைவேற்றினர். அதை அரசிற்கும் அனுப்பி வைத்தனர்.

பெயருக்கு முன்னால் மரியாதை நிமித்தமாக குறிக்கப்படும் ஸ்ரீ எனும் வார்த்தைக்கு பதில் திரு எனும் சொல் அரசாணையாக வருவதை, அன்றைய பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தார்கள்.

மானத்தமிழர்களுக்கும் ஆரிய பார்ப்பனர்களுக்கும் இது தொடர்பாக பல ஆண்டுகள் கடுமையான சண்டையே நடைபெற்றது. ஆரிய பார்ப்பனர்களின் எதிர்ப்பினால் திரு என்கின்ற சொல் அரசு உத்தரவாக வருவதை பார்ப்பனர்கள் தடுத்துவிட்டார்கள்.

அதன்பிறகு 1967 இல் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனபின்தான் அரசுக்கு முதல் சுற்றறிக்கையாக மக்கள் பெயருக்கு முன்னால் ஸ்ரீ க்கு பதில் திரு என்ற சொல்லை பயன்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டார்.

**பெரியார் சரவணன்**

**பெயருக்கு முன்னால் மரியாதை நிமித்தமாக குறிக்கப்படும் ஸ்ரீ எனும் வார்த்தைக்கு பதில் திரு எனும் சொல் அரசாணையாக வருவதை, அன்றைய பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். மானத்தமிழர்களுக்கும் ஆரிய பார்ப்பனர்களுக்கும் இது தொடர்பாக பல ஆண்டுகள் கடுமையான சண்டையே நடைபெற்றது. ஆரிய பார்ப்பனர்களின் எதிர்ப்பினால் திரு என்கின்ற சொல் அரசு உத்தரவாக வருவதை பார்ப்பனர்கள் தடுத்துவிட்டார்கள்.**

உண்மையில் தமிழர்களுக்கு என்று தமிழர்களின் நாகரிகம், பண்பு இவைகளுக்குப் பொருத்தமான பண்டிகை கிடையாது. அப்படி இருந்தும் நம் மக்களுக்கு பண்டிகைகளுக்கு அளவே இல்லை. பல பண்டிகைகள் இருந்து வருகின்றன. ஆனால் இவைகளின் பெயரைப் பார்த்தால் அவை அத்தனையும் சமற்கிருதப் பெயர்களாகவே இருக்கும்.

தமிழர்கள் பண்பு, நாகரிகம், கலாச்சாரம், பழக்க வழக்கம் இவைகளைக் கொண்டதாக இருக்குமானால் அதற்கு தமிழிலேயே பெயர் இருந்திருக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் வடமொழியில் இருக்குமானால் எப்படி தமிழர்களுக்கு உண்டான பண்டிகை என்று கூற முடியும்? மேலும் ஏதோ பொங்கல் பண்டிகை என்று கூறும் முறையில், தமிழ்ப் பெயராக இருப்பதும் அன்றி நம் மக்களுக்கு ஏற்ற பண்டிகையாகவும் இருக்கிறது.

இதற்குக் கூட பார்ப்பனர்கள் சங்கராந்தி என்று பெயர் கொடுத்து பண்டிகைகள் மேல் கட்டுக்கதைகளை ஏற்றிவிட்டு, அது இந்திரனுக்கு கொண்டாடப்படும் பண்டிகை என்பதாக மாற்றிவிட்டார்கள்.

பண்டிகைகள் ஒவ்வொன்றையும் எடுத்து ஆராய்ந்து பார்த்ததில் இப்பண்டிகையை மட்டும்தான் பார்ப்பன பண்டிகைகளில் இருந்து தமிழர் பண்டிகையாக மாற்றம் செய்ய முடிந்தது. தமிழர்களின் பண்புக்கு ஏற்ற வண்ணம் அதன் அவசியத்தையும், கொண்டாடும் முறையையும் விளக்கியும் வருகிறோம். என்று கவலைப்பட்டும், பேசியும், எழுதியும் ஆரிய சூழ்ச்சியிலிருந்து பொங்கல் பண்டிகையை விடுவித்தும் வந்த பெரியார், 1935 இல் திருச்சியில் அகில தமிழர் மாநாடு என்று ஒரு மாநாட்டைக் கூட்டினார். அது பசுமலை சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடைபெற்றது. அதில் கா. சுப்பிரமணியனார், தமிழ்வேல் பி.டி.ராஜன், திரு.வி.க., மறைமலை அடிகளார் முதலான தமிழ் அறிஞர்கள் பல கலந்து கொண்டனர்.

இதில் மற்றொரு சிறப்பு என்னவென்றால் ஐயா ஆசிரியர் வீரமணி அவர்களும் தனது 19 வது வயதில் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

மாநாட்டில், பொங்கல் சமய விழாவா? சமயமற்ற விழாவா? என்று பலத்த விவாதம் நடைபெற்றது. இறுதியாக மறைமலை அடிகள் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். பொங்கலை சமயவிழா என்று சொல்லி சர்ச்சையைக் கிளப்பி கலகம் செய்ய யார் முயன்றாலும் அவர்கள் இந்த மாநாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

இதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று பெரியாரும் தெளிவாக பதில் உரைத்தார். உங்கள் மதச்சார்பற்ற, முதன்மையான, பொன்னான தமிழர் விழா என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று பெரியார் சொன்னதும் அனைவரும் கையொலி எழுப்பினர்.

மாநாட்டில் கலந்து கொண்ட சிறப்பு வருகையாளர்கள், அறிஞர்கள், கரந்தை தமிழ்ச்சங்கத் தலைவர் உமாமகேசுவரனார், பேராசிரியர் கா.சுப்பிரமணியம் பிள்ளை, தெ.போ.மீனாட்சி சுந்தரனார். திரு.வி.க. மறைமலை அடிகள், தந்தை பெரியார், பி.டி.ராஜன் இன்னும் பலர் வந்திருந்தனர். இதில் தமிழைப்பற்றியும் தமிழர்களைப் பற்றியும் ஆற்காடு ராமசாமி முதலியார், பாவேந்தர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி, போன்றோர் சிறப்புரை ஆற்றினர்.

இந்த மாநாட்டில்தான் பொங்கலைப் பற்றிய தீர்மானம் முன் மொழிந்து, வழிமொழியப்பட்டது. தீர்மானத்தை முன்மொழிந்தவர் பி.டி.ராஜன், வழிமொழிந்தவர் திரு.வி.க அவர்கள். ●

# துப்பாக்கி உரிமம் பெறுவது எப்படி?

ஒருவருக்கு தன்னை தானே பாதுகாக்க துப்பாக்கி தேவைப்படும் பட்சத்தில் துப்பாக்கி உரிமம் பெற சென்னையில் உள்ளவர்கள் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திலும், மாவட்டங்களில் உள்ளவர்கள் கலெக்டர் அலவலகத்திலும் தங்களது வருமான வரிச் சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் (வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் கார்டு, பான்கார்டு), தொழில் ரீதியான விவரங்கள் பாங்க் பேலன்ஸ் ஷீட், ஆடிட்ரிப்போர்ட், சொத்து விவரங்கள், அவர்களுக்கு எதிரிகளிடமிருந்து எதுவும் மிரட்டல் இருந்தால் அதுகுறித்த போலீஸ் எஃப்.ஐ.ஆர். நகல் போன்றவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

அந்த ஆவணங்களை சரிபார்த்த பின்னர் கமிஷனர்/கலெக்டர் அலுவலகத்தின் வாயிலாக விசாரணை நடைபெறும் அவர்களிடம் என்ன காரணத்திற்காக துப்பாக்கி வாங்க விரும்புகிறார்கள். எப்படிப்பட்ட அச்சுறுத்தல்களை இருக்கின்றன என்கிற ரீதியில் விவரங்கள் கேட்கப்படும். துப்பாக்கி வாங்க விரும்புவர் வசிக்கும் பகுதியின் உள்ளூர் காவல் நிலையத்தில் உள்ள போலீஸ் அதிகாரி நேரில் வந்து விசாரிப்பார். இதன் அடிப்படையில்தான் துப்பாக்கி வாங்குவதற்கான லைசென்ஸ் வழங்கப்படும். அந்த லைசென்ஸை வைத்து துப்பாக்கி விற்கும் நிறுவனங் களில் துப்பாக்கி வாங்கலாம். துப்பாக்கி வாங்க விரும்புபவர்கள் மீது ஏற்கனவே கிரிமினல், சிவில் புகார்கள் இருந்தால் அவர்களது லைசென்ஸ் மனு கண்டிப்பாக நிராகரிக்கப்படும். இதுதவிர போலீசுக்கு வேறு எந்த வகையில் சந்தேகம் இருந்தாலும் அதன் பெயரிலும் லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்த



அவர்களுக்கு எல்லா அதிகாரங்களும் உள்ளன. ஏர் கன் (Air Gun) வகை துப்பாக்கிகள் வாங்குவதற்கு லைசென்ஸ் எதுவும் தேவையில்லை.

புதிதாக துப்பாக்கி உரிமம் பெற்றவர்கள் மூன்று மாதங்களுக்குள் துப்பாக்கி வாங்க வேண்டும். அதற்கான லைசென்ஸ் மூன்று வருட காலத்துக்கு கொடுக்கப்படுகின்றது. அந்தக் காலக்கெடு முடிந்த பிறகு கட்டாயம் புதுப்பிக்க வேண்டும். அதைப் புதுப் பிக்க கமிஷனர் / கலெக்டரிடம் மீண்டும் விண்ணப் பிக்க வேண்டும். அப்படி விண்ணப்பிக்கும் போது ஏற்கனவே துப்பாக்கி உரிமம் இருந்த காலத்தில் உங்களின் பேரில் காவல்துறையின் நற் சான்றிதழ் அவசியம் தேவை. உரிமம் பெற்ற காலத்தில் துப்பாக்கி வைத்திருப்பவர் மீது போலீஸூக்கு சந்தேகம் வந்தால், அவர்கள் விசாரணைக்கு எந்த நேரத்திலும் உட்பட வேண்டியிருக்கும். இதுதவிர, அந்தத் துப்பாக்கி தொலைந்து போனால் அருகிலுள்ள காவல் நிலையத் தில் உடனடியாக புகார் கொடுக்க வேண்டும்.

துப்பாக்கி லைசென்ஸ் பெற்ற ஒரு நபர் அதிக பட்சம் மூன்று துப்பாக்கிகளை மட்டுமே வைத்துக் கொள்ள முடியும். ரிவால்வர் (Revolver), பிஸ்டல் (Pistol), சிங்கிள் பேரல் கன் (Single Barrel Gun) டபுள் பேரல் கன் (Two Barrel Gun) சிங்கிள் ரைபிள் (Single Rifle), டபிள் பேரல் ரைபிள் (Double Barrel Rifle) ஆகிய வகைகளில் துப்பாக்கிகள் கிடைக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் ஒன்று மட்டுமே வாங்க முடியும். இந்த வகையான துப்பாக்கிகள் ரூபாய் ஐத்பதாயிரத்திலிருந்து இரண்டு லட்சம் வரையாகும். தோட்டாக்கள் எண்ணிக்கை என்கிற விஷயத்தில் ஒரு வருடத்துக்கு 100 தோட்டாக்கள் வரை வாங்க முடியும். துப்பாக்கி வாங்கியவர் வைத்திருக்கும் அல்லது பயன்படுத்தும் ஒவ்வொரு தோட்டாவுக்கும் அவரே பொறுப்பு.

சென்னை அல்லது தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களில் துப்பாக்கி லைசென்ஸ் பெற்று இருந்தால், தமிழகத்தில் உள்ள எல்லா பகுதிக்கும் எடுத்துச் செல்லாம். வேறு மாநிலங்களுக்குப்போகும் போது மறுபடி, போலீஸ் கமிஷனர் / கலெக்டரின் அனுமதி பெற்றே எடுத்துச்செல்ல வேண்டும்.

தற்காலிகமாக வெளிநாடு போய்வரும் பட்சத்தில் துப்பாக்கியை வாங்கிய இடத்திலோ, அல்லது சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திலோ ஒப்படைத்து விட்டுச் செல்லலாம். நிரந்தரமாக துப்பாக்கியை சரண்டர் செய்ய, அதற்கான உரிமத்தை, காவல் நிலையத்தில் சரண்டர் செய்து சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டும். துப்பாக்கியை வாங்கிய இடத்திலே திரும்பக்கொடுத்தால், நல்ல தொகைக்கு வாங்கிக்கொள்வார்கள்.

**டாக்டர் நாகராஜ்.எஸ்.**



**பெண்களுக்கான எத்திராஜ் கல்லூரி:**

தென்னிந்தியக் கல்வி உலகில் மிகவும் புகழ் பெற்றிருந்த ஆர்.எம்.ஸ்டேதம் என்கிற வெள்ளைக்காரர் எத்திராஜின் நெருங்கிய நண்பர்.

ஒருநாள் அவர், எத்திராஜின் வீட்டில் சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது ஏன், நீங்கள் பெண்களுக்கான கல்லூரி ஒன்று ஆரம்பிக்கக்கூடாது என்று எத்திராஜிடம் கேட்டார்.

கப்பில் இருந்த காப்பியை குடிக்கும் நேரத்திற்குள் எத்திராஜ் சென்னையில் ஒரு பெண்களுக்கான கல்லூரியை ஆரம்பிக்க பத்துலட்சம் ரூபாய் நன்கொடையாக அளிப்பதாக அறிவித்தார். இப்படி சூடான காப்பியை சுவை யோடு குடித்து முடிப்பதற்குள் உருவானதுதான் எத்திராஜ் கல்லூரி.

பிறகு தன்னுடைய உயிலில் இந்தக் கல்லூரிக்காக 50 லட்ச ரூபாய் பெறுமானமான சொத்தை எழுதி வைத்தார். மிக உயர்ந்த நிலைக்கு உயர்ந்துவிட்ட எத்திராஜ், தம்முடைய உறவினர்களை மறக்கவில்லை. எத்திராஜிடம் வக்கீல் தொழிலைப் பயின்ற பலர் பெரும் புகழ், உயர்ந்த பதவிகள் போன்றவைகளை அடைந்துள்ளார்கள்.

அவர்களில் சிலர் சி. சுப்ரமணியம், குடியரசுத் தலைவராக இருந்த ஆர்.வெங்கட் ராமன் மற்றும் நீதிபதிகளான பி.எஸ்.கைலாசம், ஆர். சதாசிவம், என்.சோமசுந்தரம் போன்றவர்களும் அடங்கு வார்கள்.

இங்கிலாந்து என்று சொன்னவுடன் லண்டன் என்று பலருக்கு நினைவுக்கு வந்தாலும் இங்கு வந்து சென்றவர்களுக்கு நினைவில் நிற்பது இந்த ஊரின் பசுமை. மீண்டும் மீண்டும் அதைப் புகழ்வார்கள். மேலும் இங்கு மக்களுக்கு கிடைக்கும் சுத்தமான தண்ணீர் அவர்களை வியக்க வைக்கும். இதன் காரணம் இங்கு இடைவிடாமல் மழை பொழிவதாக நம்பி செல்வார்கள். "கொடுத்து வச்சவங்க சார்" இந்த ஊர்காரங்க என்று சொல்லிச் செல்வார்கள்.

நம் மாநிலத்தின் அளவே மக்கள் தொகை கொண்ட, நம்மை விட பெரிய நிலப்பரப்பு, நம்மை விட குறைந்த அளவு மழை வளம்...ஆமாம் குறைந்த அளவு நீர் வளம் கொண்ட ஒரு இடம் இப்போது நம் மாநிலத்தை விட பசுமையாக இருப்பது எப்படி?

அங்கு மக்கள் தண்ணீருக்கு ராவும் பகலும் குடத்தை தூக்கிக் கொண்டு அலைந்து கஷ்டப்படாமல் 24 மணிநேரமும் சிறப்பாக வாழ்வதெப்படி?

யுகே மக்கள் தொகை : 6.5 கோடிகள்

(65.65 மில்லியன் 2016)

தமிழகத்தின் மக்கள் தொகை : 6.7 கோடிகள்

(67, 86 மில்லியன் 2012)

யு கே யின் நிலப்பரப்பு : 2,42,426 கி.மீ

தமிழ்நாட்டின் நிலப்பரப்பு : 1,30,000

யு கே யின் ஆண்டு மழைப் பொழிவு : 885 மி.மி.லி

தமிழகத்தின் ஆண்டு மழைப் பொழிவு : 945 மி.மி.லி (சுமார் 10% அதிகம்)

இதைத் தாண்டி இவர்களுக்கு நம்மூரை போல் பக்கத்து மாநிலத்தில் இருந்து வரும் காவிரி போன்ற ஆறுகளும் கிடையாது. முல்லை பெரியார் அணைக்கட்டிலிருந்து நீர் வரத்தும் கிடையாது. நான் மேலே சொன்ன கணக்கில் இந்த நதி நீர்வளங்களை கணக்கில் கொள்ளவில்லை. மேலும் இத்தகைய பெருநதிகள் இல்லாமல் போவதால் இவர்களிடம் பெரும் அணைக்கட்டுகளும் கிடையாது. அது தனிக்கதை.

இப்படி இருக்க நம் மாநிலத்தில் மட்டும் குடிக்கத் தண்ணீர்ப் பஞ்சம் என்றும் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லை என்றும் புலம்பும் நிலை ஏன்?

சிறப்பான நீர மேலாண்மை இல்லாததுதான்.

சிறப்பான திட்டமிடலும் நீர் பகிர்வும்தான் காரணம். இந்தப் பிரச்சனையின் பல பக்கங்களில் ஒரு

# நீர் மேலாண்மை இங்கிலாந்து





அனுமதியே கிடைக்கிறது. அத்தகைய கட்டிடங்களுக்கு குறைவு.

இங்கு தண்ணீர் அசுத்தப்படுத்துவதை பெரும் குற்றமாக பார்க்கின்றனர். சிறு கால்வாய்களின் அவசியமும் அவை எப்படி இயற்கையுடன் ஒத்து இருத்தலின் அவசியத்தையும் மிக கவனமாக உணர்ந்து செயல்படுகின்றனர். அதனால்தான் எந்த கிராமத் திற்குச் சென்றாலும் தெள்ளிய நீரோடை பாய்வதை நீங்கள் காணலாம். இங்கு யாரும் வாய்கால்களில் சோப்பு போட்டு குளிக்கவோ, துணி துவைக்கவோ தடை செய்யப்படுகிறது.

சிறு பகுதியைப் பார்க்கலாம். இங்கு சிறு வாய்க்கால்கள் சிறப்பாக பராமரிக்கப்படுகின்றன. ஏரிகள் ஆக்கிரமிக் கப்படுவதில்லை. புதிய ஏரிகள் உருவாக்கப்படுகின்றன.

நீர் வளத்தை சுத்திகரித்து பகிர்வதில் தனியார்கள் இருந்தாலும் அவை அரசால் உள்ளூர் நகராட்சி களால் வெகு சிறப்பாக கண்காணிக்கப்படுகிறது. எந்த கழிவுநீரும் ஆற்றிலோ வாய்கால்களிலோ விடப்படுவ தில்லை. முழுவதும் சுத்திகரிக்கப்பட்டு மறுசுழற்சி முறையில் திரும்ப உபயோகிக்கப்படுகிறது.

இங்கு தனியார் யாரும் விட்டு உபயோகத்திற்கோ, தொழிற்சாலைக்கோ ஆழ்துளை கிணறு தோண்ட முடியாது. அரசிடம் கேட்டு அவர்கள் மூலமாக குழாய் மூலம் தண்ணீர் பெற்றே பயன்படுத்த முடியும். அதனால்தான் இந்த நாட்டில் பல இடங்களில் வெறும் 10 அடியில் நீர் பெருக்கெடுக்கும்.

ஒரு வீடோ, அலுவலகமோ, தண்ணீர், மின்சாரம், கழிவு நீர் சுத்திகரிப்பு வழி ஆகியவற்றை செய்யாமல் இயங்கவே முடியாது. இது நகர்புறமோ, கிராமபுறமோ எங்கிருந்தாலும் ஒரே சட்டம்தான். இதை மீறுபவர்கள் கடுமையாக விரைந்து தண்டிக்கப்படுகிறார்கள். அதற்கான சட்டங்கள் உண்டு. இப்படி செய்பவர்களை எத்தனை பெரிய மனிதர்களாக இருந்தாலும் சமுதாயம் புறக்கணித்து அவமதிக்கிறது. எனவே யாரும் செய்யத் துணிவதில்லை. முளையிலேயே கிள்ளி எறியப்படு கிறது. அடிப்படை வசதிகளை நிறைவேற்றாமல் எந்த ஒரு குடியிருப்போ, தொழிற்சாலையோ அமையவே முடியாது.

பலருக்கும் தெரியாத ஒரு விசயம், இங்கிலாந்தில் எந்த ஒரு வீட்டிலும் தண்ணீர் மேலேற்றும் பம்புகளோ மோட்டார்களோ கிடையாது. நீங்கள் முதல் மாடியில் இருந்தாலும் மூனாவது மாடியில் இருந்தாலும் தண்ணீரை உங்கள் வீட்டுக்கு ஒரு குறிப்பிட்ட அழுத் தத்துடன் அளிக்க வேண்டியது அந்த நகராட்சியின் கடமை. இன்றுவரை அதை தவறாமல் செய்கிறார்கள். 3 மாடிக்கு மேல் இருக்கும் கட்டிடங்களுக்கு அதற்கான சிறப்பு வசதிகளை செய்து விட்டுத்தான்

நீரில் மீன்களின் அவசியத்தை உணர்ந்து அவை களின் வகைகளும் எண்ணிக்கைகளும் கண்காணிக்கப் பட்டு குறையாமல் பார்த்துக்கொள்கின்றனர். மீன் இவர்களின் சிறப்பு உணவாக இருந்தாலும், கண்ட இடத்தில் பிடித்து, கண்ட இடத்தில் விற்க முடியாது. மேலும் மரங்களை வளர்ப்பதில் தனி கவனம் கொள்கின்றனர். தோட்டங்களை பராமரிப்பதில் ஒவ்வொருவரும் பெருமை கொள்கின்றனர். தனி கவனம் செலுத்தி தன் தோட்டங்கள் சிறப்பாக இருக்க முயல்கின்றனர். இந்த தோட்டக் கலையை கொண்டு ஒரு பெரிய வியாபாரமே உருவாகியுள்ளது. ஊர் அழகாக இருக்க நகரத்தில் இல்லாவிட்டாலும் கிராமங்களில் மக்கள் தங்கள் ஓய்வு நேரத்தை இலவச மாகக் கொடுக்கின்றனர். அப்படி செய்பவர் களை அந்த ஊர் மதிக்கிறது பைத்தியக்காரன் என்று சொல் வதில்லை.

சரி...இப்படிப்பட்ட ஊரில் “கெமிக்கல்“ தொழிற் சாலைகளே இல்லையா என்றால் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் உண்டு என்பதுதான் உண்மை. மிகப்பெரிய ஐ.சி.ஐ. தொழிற்கூடங்கள் உண்டு. கோகோ கோலா, பெப்சி போன்ற தொழிற்கூடங்களும் உண்டு. ஆனால் அவைகளில் இருந்து வரும் கழிவுநீர்களின் தன்மை மிகக்கடுமையாக கவனிக்கப்படுகிறது. சில இடங்களில் கழிவுநீர் வெளியே வருவதே இல்லை. அவை மறுசுழற்சி செய்யப்படுகிறது. அந்த அளவுக்கு கட்டுமானங்கள் செய்யாவிட்டால் அந்த ஆலைகளை அமைக்க ஒப்புதல் அளிக்கப்படுவதேயில்லை.

பொது மக்கள் இந்த விஷயத்தில் ஓரளவு அறிவுடன்தான் இருக்கிறார்கள். அரசு நீர் பங்களிப்பை சிறப்பாக பராமரிக்கிறது. மாசுக்கட்டுப்பாட்டு துறை லஞ்ச ஊழலுக்கு போகாமல் சமுதாய உணர்வுடன் தொடர்ந்து செயல்படுகிறது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

எல்லோரும் சேர்ந்து ஒழுங்காக தேரை இழுக்கி றார்கள். பலன் கிடைக்கிறது.

இப்போது சொல்லுங்கள் நாம் எங்கிருக்கிறோம்? நாம் எங்கு செல்ல வேண்டும்?

நன்றி : **ரவி சுந்தரம்** ●

# வயிற்று வலி ஒரு பறவை?

## மேனாள் மேயர் சா.கணேசன் நினைவலைகள்

எனக்கு நீண்ட காலமாக வயிற்றுப்புண் தொல்லை இருந்து வந்தது. அதைப்பொருட்படுத்தாது கட்சிப் பணியிலேயே மூழ்கி இருந்தேன்.

எனக்குக் கட்சி மீதிருந்த ஆர்வமும், அக்கறையும் காரணமாக என் உடலை அதற்குத் தக்கவாறு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் நேரம் இல்லாமல் போய் விட்டது. மேயராக பணியாற்றி வந்தபோது இந்நோய் அவ்வளவாக தொல்லைக் கொடுக்காமல் இருந்தது. 1972ஆம் ஆண்டு மார்ச் திங்கள் நான்காம் கிழமையில் ஒரு நாள் வயிற்று வலி தாங்கமுடியாத எல்லைக்குப் போய்விட்டது.

அரசு பொது மருத்துவமனைக்குச் சென்றேன். வயிற்று வலிக்கு என்று இருக்கும் மருத்துவரிடம் போக வழிகாட்டினார்கள். சென்றேன். இளம் மருத்துவர்கள் எனது உடலைப் பரிசோதனை செய்தார்கள். ஒரு குழாயைத் தொண்டை வழியாக உள்ளே செலுத்தி, வயிற்றில் புண் இருப்பதைக் கண்டறிந்தார்கள். குறிப்பு எழுதி வைத்தார்கள் அனுபவமிக்க மூத்த மருத்துவர் வந்தார். அவரது பெயர் இராமச்சந்திரா. தமிழகத்தில் தலைசிறந்த வயிறு பற்றிய நோயைக் குணப்படுத்துவதில் வல்லவராம்.

இளம் மருத்துவர்கள் எழுதி வைத்திருந்தக் குறிப்பேட்டினைப் படித்தார். என்னைப் பார்த்து, உங்களுக்குக் குடிப்பழக்கம் உண்டா? இது அவரது முதல் கேள்வி, “இல்லை“ என்றேன். காரம் உணவில் அதிகம் சேர்த்துக்கொள்வீர்களா? இது இரண்டாவது கேள்வி. எங்கள் வீட்டில் காரம் அதிகம் சேர்க்க மாட்டார்கள் என்றேன்.

சைவமா? என்றார், ஆமாம் என்றேன். நேரத்தோடு சாப்பிடுவீர்களா? அதுதான் இல்லை: எப்போதும் நேரங்கடந்தே சாப்பிடுவது வழக்கம் என்றேன். நீங்கள் வணிகரா?அரசியல்வாதியா? அடுத்த கேள்வி.

நான் அரசியலில் தொண்டு செய்து வருபவன் என்றேன். நீங்கள் எந்தக் கட்சி? என்று கேட்டார். கழகம் என்றேன். உங்களுக்குப் பெரியாரைத் தெரியுமா? என்றார். தொடர்பு உண்டு என்றேன். நான் பெரியாருக்கு மருத்துவம் பார்த்து வருபவன் என்று பெருமையோடும் மகிழ்ச்சியோடும் சொன்னார். எனக்கு டாக்டர் மீதிருந்த மதிப்பும் மரியாதையும் மேன்மேலும் கூடியது,

மருந்து கொடுத்தே வயிற்றுப் புண்ணை ஒரு மாதத்தில் போக்கி விடுகிறேன். இனிமேல் நேரத்தோடு சாப்பிடும் வழக்கத்தைப் பின்பற்றுங்கள். இல்லையெனில் மீண்டும் மருத்துவமனைக்கு வர நேரிடும். அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாவீர் என்று எச்சரிக்கை விடுத்தார். ஒரு மாதம் மருத்துவமனையிலேயே தங்கி மருத்துவம் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறியதோடு, சிறப்புப் பகுதியில் சேர்த்துவிட்டுச் சென்றார். இரண்டாவது மாடியில் “பி“ பிரிவில் (வார்டில்) படுக்கை. மறு நாளிலிருந்து செய்தி அறிந்த உறவினர்களும், நண்பர்களும், கழகத் தோழர்களும் மருத்துவமனைக்கு படையெடுக்கத் தொடங்கினார்கள். என் மீது அன்பு கொண்டவர்கள் பழங்கள், ஆர்லிக்ஸ், போர்ன்விட்டா போன்றவற்றை வாங்கி வந்து குவித்தார்கள். அப்போதுதான் அன்பு கொண்டவர் களை அடையாளம் காண முடிந்தது. அவற்றை என்னைப் பார்க்க வந்த வசதி குறைந்த கழகத் தோழர்களுக்குக் கொடுத்து மனம் மகிழ்ந்தேன்.

மற்ற வார்டுகளில் இருந்த ஏழை நோயாளிகளுக்கும் என்னைப் பார்க்க வந்தவர்களுக்கும் பழங்களைக் கொடுத்து மகிழ்ந்தேன். விரைவில் நலம் பெற வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுவார்கள். இந்த வாழ்த்துகளால் மனதளவில் குணம் பெற்று வந்தேன்.





பேச்சோடு பேச்சாக முன்னாள் மேயர் ஒருவர் இதே நோயால் பாதிக்கப்பட்டு உள்ளிருப்பு நோயாளியாக அனுமதிக்கப்பட்டு உள்ளார் என்றார் டாக்டர், பெயரென்ன? ஆளுநர் கேட்க, அவர் பெயர் சா. கணேசன் என்றார் டாக்டர். அவர் எனக்கு நன்கு அறிமுகமானவர். உடனே பார்க்க வேண்டுமே என்றார் ஆளுநர்.

இரண்டாவது மாடியில் ஸ்பெஷல்வார்டில் உள்ளார் என்றார் டாக்டர். அதற்கென்ன! நான் பார்க்க வேண்டும் என்று ஆவலோடு கூறினார். இரண்டாவது மாடிக்கு நீங்கள் செல்ல வேண்டுமே, வேண்டாம் நானே அவரை இங்கே வரச் சொல்கிறேன் என்று கூறி டாக்டர் தகவலை தொலைபேசி மூலமாக மாடியில் பொறுப்பில் உள்ள டாக்டருக்குத் தகவல் தெரிவித்தார். செய்தியைக் கேள்விப்பட்டதும் நான் ஆர்வத்தோடு நோயாளி என்பதையே மறந்த நிலையில் வேகமாகச் சென்று மேதகு ஆளுநரைப் பார்த்து வணக்கம்! என்று கூறினேன்.

எனக்கு நன்கு அறிமுகம் ஆன மேதகு ஆளுநர் கே.கே.ஷா அவர்கள் (ஆளுநரை கலைஞர் கருணாநிதி ஷா என்று சிலர் விமர்சிப்பது உண்டு) அப்போதெல்லாம் தனியார் மருத்துவமனை சிறப்பான நிலையில் இல்லாத சூழ்நிலையில், அரசு பொது மருத்துவமனையை நாடி வந்தார். அவரும் என்னைப்போல் வயிற்றுப் பிரச்சினையாக வந்தார்.

அன்று எப்போதும் இல்லாத நிலையில் மருத்துவமனையை நிர்வாகத்தினர் சுத்தமாகவும், சுகாதாரமாகவும், ஒழுங்காகவும் வைத்திருந்தனர். மேதகு ஆளுநர் வந்துள்ளார் என்ற செய்தி மருத்துவமனை முழுவதும் பரவியது.

இன்று வருவது முன்கூட்டியே தெரிந்த நிலையில் டாக்டர் இராமச்சந்திரா அவரது துணை டாக்டர்கள் புடைசூழ மேதகு ஆளுநரை வரவேற்றனர். ஆளுநரை வரவேற்று உடல் நிலையைக் கேட்டறிந்து பரிசோதனை செய்தார்கள்.

வயிற்று வலி என்றார் ஆளுநர், அரசியலில் உள்ள உங்களைப் போன்று உண்மையாக உழைப்பவர்களுக்கு காலம் தவறி சாப்பிடுவதால் வருகின்ற நோய் உங்களை மட்டும் விடுமா என்ன? என்றார் டாக்டர்.

உங்களைப் போன்று நானும் வயிற்று வலி நோய் காரணமாக டாக்டரைப் பார்க்க வந்தேன். குணமாகி வருகிறீர்களா? என்று ஆளுநர் கேட்டார். சிறந்த டாக்டரான இராமச்சந்திரா அவர்களின் மருத்துவ சிகிச்சையில் விரைவாக குணமாகி வருகின்றேன் என்றேன்.

டாக்டரைப் பார்த்து, மேதகு ஆளுநர் அவர்கள், இவர் எனக்கு நன்கு பரிச்சயமானவர். நான் முதல் முதலாக ஆளுநராகப் பொறுப்பேற்க பம்பாயிலிருந்து இரயிலில் வந்து சென்னை இரயில் நிலையத்தில் இறங்கியபோது, முதல்வர் கலைஞர் அவர்கள் என்னை வரவேற்றதும், மேயராக இருந்த இவரைத்தான் எனக்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தினார். ஏனெனில், இவர் நகரின் முதற்குடி மகன் அல்லவா? என்று வியப்போடு கூறினார்.

ஆளுநர் தொடர்ந்து அதுமட்டுமின்றி மாநகராட்சி சார்பில் வரவேற்பு விழா நடத்திப் பெருமைப் படுத்திய நிகழ்ச்சி தனது நினைவில் நீங்காத ஒன்று என்றும் கூறினார். மகிழ்ச்சியோடு மருத்துவ குழாமே மேதகு ஆளுநர் என்னைப் பற்றிக் கூறியதைக் கேட்டு வியப்படைந்தது.

மருத்துவப் பரிசோதனை முடிவடைந்த நிலையில் ஆளுநர் எல்லோருக்கும் நன்றி கூறியும், என்னைப் பார்த்து புன்னகைத்தவாறு வரட்டுமா? என்றும் கூறி விடைபெற்றார். அந்த நாள் எனது வாழ்நாளில் மறக்க இயலாத நாள்.

மேதகு ஆளுநர் அவர்கள் சென்னை மருத்துவ மனையில் என்னை சந்தித்து நலம் விசாரித்த செய்தி காட்டுத்தீயாய் வெளியே பரவியது. மருத்துவமனை நிர்வாகமே நான் மருத்துவமனையில் சேர்ந்து இருப்பது பற்றியும், எதிர்பாராது வந்த மேதகு ஆளுநர் அவர்கள் என்னை நலம் விசாரித்த செய்தியையும் முதலமைச்சர் அலுவலகத்துக்குத் தெரிவித்தது.

அன்றைய கால கழகத்தின் பொருளாளர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் இரண்டு நாள்கள் கழித்து மருத்துவமனைக்கு வந்தார். என்னைக்கண்டதும் கேட்ட கேள்வியே நீங்கள் குடிக்க மாட்டிங்களே எப்படி வயற்று வலி வந்தது? என்று ஆவலோடு கேட்டார். காரமான உணவு சாப்பிட்டாலும் நேரங் கடந்து உண்பதாலும் வயிற்றுப் புண் வரும் என்றும், மூத்த மருத்துவர் கூறியதை எடுத்துச் சொன்னேன்.

கவலையோடு கேட்டறிந்த எம்.ஜி.ஆர். சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத முடியும் என்பார்கள் உடலை நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறியபடி எழுந்தவர். நான் படப்பிடிப்பிலிருந்து நேரடி யாக மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். பழங்கள் கூட வாங்கிவர முடியவில்லை என்று சொல்லி என் கையில் ஒரு காகித உறையைத் திணித்து விடை பெற்றார். நான் எழுந்து நின்று வணங்கி நன்றி கூறி வழி அனுப்பினேன். என் மீது அவர் வைத்திருந்த அன்பை எண்ணி மனம் நெகிழ்ந்தது.

இந்தச் செய்தியினை மறுநாள் முரசொலி ஏட்டில் வெளியிட்டிருந்தார்கள். என் மீது என்றும் அன்பு வைத்திருக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இரண்டு நாள்கள் கழித்து மருத்துவ மனைக்கு வந்தார்.

அன்றும் மருத்துவமனை மிக சுத்தமாக பராமரிக் கப்பட்டிருந்தது. குறிப்பாக கழிப்பறைகள் சுத்தம் செய்யப்பட்டு சுண்ணாம்பு போடப்பட்டும், பினாயில் தெளிக்கப்பட்டும் இருந்தது. மருத்துவமனை உள் நோயாளிகளுக்கு இது மகிழ்ச்சியை ஊட்டியது.

என்னைக் கவனித்து வந்த டாக்டர் இராமச்சந்திரா மாண்புமிகு முதல்வரிடம் நான் குணமடைந்து வருவதாகக் கூறினார். இதைக்கேட்டதும் கலைஞர் என்னைப் பார்த்து சீக்கிரம் குணமடைந்து விடுவீர்கள் என்றார். மருத்துவர்கள் மருந்து கொடுத்து வருவதால் பாதி நோயும், குறிப்பாக நீங்கள் வந்து பார்ப்பதும் மற்றும் ஆளுநர் ஷா அவர்களும், எம்.ஜி.ஆர், வந்து பார்த்து நலம் விசாரித்தாலும் மீதி நோயும் என்னை விட்டுப் பறந்தோடிவிட்டது என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு பதில் சொன்னேன். முதல்வர் அவர்கள் விடைபெறும் முன்பு அவருக்கே உரித்தான வகையில் சொல்லாற்றலில் வல்லவரான கலைஞர் அவர்கள் வயிற்று வலி என்பது ஒரு பறவை என்பது இப்போது தான் எனக்குப் புரிந்தது என்று நகைச் சுவையாகச் சொன்னாரே பார்க்கலாம், அப்போது அங்கே கூடியிருந்த எல்லோரும் கொள்ளென்று சிரித்தனர்.



**சு**தந்திர இந்தியாவின் முதல் பிரதமரான நேரு ஒருமுறை தமிழக எம்பிக்களை அழைத்து விருந்தளித்தார். அப்போது நேரு, "அடுத்த 100 ஆண்டுகளுக்கு மக்கள் எந்த தலை வரைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்" என்று கேட்டார்.

அதற்கு ஒரு எம்.பி., சர்தார் வல்லபாய் பட்டேல் என்று சொன்னார். இன்னொருவர் மகாத்மா காந்தி என்று சொன்னார் மற்றொருவர் உங்களைத்தான் பெருமையாகப் பேசிக்கொண்டிருப்பார்கள் என்று சொன்னார்.

ஆனால், நேரு இவற்றையெல்லாம் மறுத்தார். "நீங்கள் அரசியல்வாதிகள் அதனால்தான் அரசியல் சார்ந்த தலைவர் களைக் குறிப்பிடுகிறீர்கள். ஆனால் உண்மை என்னவென் றால் அடுத்த 100 ஆண்டுகளுக்கு உங்கள் மாநிலத்தில் உள்ள சமூக சிர்திருத்தவாதி பெரியாரைப் பற்றிதான் பெருமையாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நாடு முன்னேற சமூக நீதியாக சீர்திருத்தமும் தனி மனித சுய சிந்தனையும் அவசியம். அறியாமை எனும் இருளால் நிரம்பி வழியும் ஒரு நாடு நிச்சயம் முன்னேறாது என உணர்ந்து அதற்காக பாடுபடும் பெரியாரைத்தான் பெருமையாக பேசிக்கொண்டிருப்பார்கள்" என்று சொன்னா ராம்.

# நலம்



*காயமே இது பொய்யடா வெறும்*

*காற்றடைத்த பையடா*

... ***சித்தர்கள்***

*காயமே இது மெய்யடா,*

*இதில் கண்ணும் கருத்தும் வையடா,*

*நோயில்லாமல் காத்து*

*நூறாண்டுகள் உய்யடா...*

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்**

ஆகியோர்கள் சொன்னது, மனித பிறவியில் உயிரின் கூடாகவும், உணர்ச்சிகளின் வீடாகவும் விளங்கும் உடலைப்பற்றியும் உடல் நலம் பற்றியும் தான் இந்தத் தொகுப்பு.

கட்டிடத்திற்கு நல்ல அஸ்திவாரம் போல், வண்டிக்கு அச்சாணிப்போல், மனிதனுக்கு அவனது உடல் நலம், சமையல் சரியில்லை என்றால் ஒரு நாள் துன்பம், அறுவடை சரியில்லை என்றால் நான்கு மாத துன்பம், ஆனால் உடம்பு சரியில்லை என்றால் ஆயுள் முழுவதும் துன்பம். உடலின் முக்கியத்துவத்தை திருமூலரும் தனது திருமந்திரத்திலேயே விளக்குகிறார்.

*உடம்பினை முன்னும் இருக்கென்று இருந்தேன்*

*உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்*

*உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டானென்று*

*உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே!*

என்று விளக்குகிறார்.

நோய் வந்தால் நாய், பூனை, கோழி ஆகிய கூட அருகம்புல்லை கடித்து தின்பதைக் காணலாம். ஐந்தறிவு ஜீவன்கள்கூட தங்கள் உடல்நலத்தில் அக்கறை காட்டும்பொழுது, ஆறறிவு பெற்ற நாம் நம் உடல்நலத்தில் அக்கறை காட்டாமல் இருக்கலாமா?

சுவைபார்த்து சாப்பிட்ட காலம் அன்று, சுகர் பார்த்து சாப்பிடும் காலம் இன்று, உணவே மருந்தாய் இருந்தது அன்று, மருந்தே உணவாக இருப்பது இன்று. உடல்நலத்தைக் காப்பதில் உணவிற்கு முக்கிய பங்கு இருக்கிறது என்று சித்தர்கள் சொன்னார்கள்.

*ஒருவேளை உண்பான் யோகி*
*இருவேளை உண்பான் போகி*
*மூவேளை உண்பான் ரோகி.*

உணவை ஒரு நாளில் ஒரு வேளை மட்டுமே உண்டு அதிலேயே அப்படியே வாழ முடிந்தவன், வாழத் தெரிந்தவன் அவன் யோகி.

ஒரு நாளில் இரண்டு வேளை உண்பவன் வசதியாக, சுகமாக வாழ்கிறவன் அவன் போகி.

ஒரு நாளில் மூன்று வேளை சாப்பிடுபவன் ரோகி. ரோகம் என்றால் நோய. மூன்று வேளை சாப்பிடுகிறவன் நோயாளியானவன் என்று சித்தர்கள் உணவு உண்ணுதலைப் பற்றி எடுத்துரைத்தனர். அந்த காலக் கருத்து. ஆனால் தற்காலத்தில்,

பசியெடுத்த பின் கையை வாய்க்குள் கொண்டு போகிறவனும் பசியடங்குவதற்குள் கையை வாயை விட்டு எடுப்பவனும் என்றைக்கும் நோய்வாய்ப்பட மாட்டான்.

**கவிப்பேரரசு வைரமுத்து.**

எப்பொழுதும் வயிற்றை அரைவயிறு உணவாலும், கால் வயிறு தண்ணீராலும், கால் வயிற்றை காலியாகவும் வைத்து இருக்க வேண்டும் என்பார்கள். இந்தியாவின் தலைசிறந்த பொறியியல் மேதையான அறிஞர் விஸ்வேஸ்வரய்யா 103 ஆண்டுகள் வாழ்ந்தவர். 100 ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ அவர் கூறும் யோசனைகளில் முதன்மையானது அளவோடு சாப்பிடு என்பதுதான். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் வலிமை பெற, அமைதி பெற உடற்பயிற்சி சிறந்த ஒன்று என்கிறது அறிவியல். உடற்பயிற்சி என்றால் ஜிம்முக்கு தான் செல்ல வேண்டும் என்பதில்லை. நடைப்பயிற்சியே உடற்பயிற்சியின் அரசன் என்பார்கள்.

நம் மானிட உடலை ஒரு அமைச்சகத்துக்கு இணையாக ஒப்பிடலாம். மூளை என்பது முதலமைச்சர், தலை கல்வி அமைச்சர், கண் சட்ட அமைச்சர், காது தகவல் தொழில்நுட்ப அமைச்சர், மூக்கு சுகாதாரத்துறை அமைச்சர், பல் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர், கைகள் தொழில்துறை அமைச்சர், இதயம் நிதியமைச்சர், வயிறு உணவுத்துறை அமைச்சர், தோல் பாதுகாப்புத் துறை அமைச்சர், கால் போக்குவரத்துத் துறை அமைச்சர், நுரையீரல் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் என உடம்பில் உள்ள ஒவ்வொரு உறுப்புகள் செய்யும் பணிகளை பிரித்துச் சொல்லலாம்.

நல்ல உடல்நலம் தானாக கிடைக்கக்கூடிய ஒன்றல்ல, அதை நாம் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். ராபர்ட் ஸ்கல்லர் சொல்வது போல நல்ல உடல் நலத்தை ஒரு பயணம் என்கிறார். நலமான உடலில் தான் நல்லமனம் இருக்கும், மகிழ்வுடன் நீண்ட நாள் வாழவும் சிந்திக்கவும், செயலாற்றவும் இவ்வுலக நலன்களை நுகரவும் உடல்நலத்துடன் இருப்பது அவசியமாகும்.

# தமிழகத்தில் மத்திய அரசு வேலைவாய்ப்புகளில் வடமாநில இளைஞர்கள் சேர்க்கப்படுவது ஏன்? அதற்கு பின்புலத்தில் இருக்கக்கூடிய அரசியல் காரணங்கள் என்ன?

டாஸ்மார்க் மூலம் லட்சக் கணக்கான இளைஞர் கள் குடிபோதைக்கு அடிமை, சினிமா மூலம் அளவுக்கு அதிகமான ஆபாசம் திணிப்பு பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதமில்லாததால் விரக்தி, கார்ப்ரேட் களால் விவசாயம் சிறு தொழில்கள் அழிப்பு.

போலீசு, நீதித்துறை உள்ளிட்ட அரசு எந் திரம் முழுவதும் சாதி வெறி மிகத் தீவிரமாக்கப் படுகிறது.

குஜராத்தை (2002) போன்று மிகப்பெரிய கலவரங்களை கட்டி யமைக்க இது போன்று பல ஏற்பாடுகளை பார்ப்பன பாசிச கும்பல் திட்ட மிட்டு செய்து கொண்டிருக்கிறது.

அரசு வேலைவாய்ப்புகளில் வடமாநில இளைஞர்களை திணிக்கப்படுவதன் பின்புலத்தில் மத்தியில் ஆளும் பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். பிஜேபி கும்பல் வேலை செய்துகொண்டு இருக்கிறது.

இதற்கு காரணம் என்ன தமிழகத்தில் பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி கும்பல் மிகப்பெரிய அளவில் ஓட்டு வாங்கி, அரசியலில் கால் பதிக்க முடியவில்லை. அதனை ஈடு கட்ட, தமிழகத்தின் சமூக அடித்தளத்தை உளவு பார்க்க பல முனைகளில் முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறது மத்தியில் ஆளும் பி.ஜே.பி. அரசும் அதிகாரவர்க்கமும், அதன் ஒரு வழிதான் தமிழகத்தில் மத்திய, மாநில அரசு வேலைவாய்ப்புகளில் வடமாநில இளைஞர்கள் திணிக்கப்படுகிறார்கள்.

மற்றொரு பக்கம் முன்னெப்போதும் இல்லாததை விட சாதி வெறியாட்டம் தூண்டி விடப்பட்டு தமிழக மக்கள் துண்டாடப்படுகிறார்கள்.

தமிழக கோவில்களை இந்து அறநிலையத் துறை யின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியே எடுத்து, பார்ப்பனர்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டு செல்லும் முயற்சியும் நடக்கிறது.

எல்லா அரசியல் கட்சிகளிலும் ஆர்.எஸ்.எஸ். சாகாவில் பயிற்சி பெற்றவர்கள் மாவட்ட அளவில் பொறுப்புகளுக்கு கொல்லைபுற வழியாக திணிக்கப்படு கிறார்கள்.

தமிழகம் பார்ப்பன எதிர்ப்புக் கோட்டையாக இருப்பதால், தொழில் வளம், இயற்கை வளம் போன்ற வற்றை அழிப்பதில், அதிகார வர்க்கத்திலுள்ள பார்ப்பனர்கள் தனிச் சிறப்பான ஆர்வம் காரணம் காட்டி வருகின்றனர்.

மேற்கண்ட அரசியல் காரணங்களை முன்னிறுத் திப் பார்க்காமல், வேலை வாய்ப்பு பறிபோவதை மட்டும் பார்த்தால் இனமுரண்பாடாகத் தான் வெளிப் படும்.

தமிழகத்தில் தனியார் தொழிற்சாலை பணி நிரந்தரம் வழங்காமல் பயிற்சி திட்டம் என்ற பெயரில் நிரந்தர வேலை வாய்ப்புகள் பறிபோய் கொண்டிருக் கிறது. காாப்பரேட், கம்பெனிகள், மேலும், காண்ட் ராட் மூலம் அற்பக்கூலிக்கு லட்சக்கணக்கான வட மாநில தொழிலாளர்களும் சுரண்டப்படுகிறார்கள்.

கார்ப்பரேட் காவி பாசிசம் கைகோர்த்துக் கொண்டு உழைப்பவர்களுக்கு எதிராக திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பாசிச அடக்குமுறை மேலிருந்து மட்டும் திணித்து விட முடியாது. அதற்கான சமூக அடிப்படைகள் தேவைப்படுகிறது. அதற்கான வேலைகளை தமிழ் மண்ணில் பார்ப்பன கும்பல் செய்து கொண்டிருக் கிறது. பாசிசத்தை எதிர்க்க அணிதிரள வேண்டும்.

**முகநூலில் இருந்து...**

# மனித நேயத்தோடு முஸ்லீம்களை புலிகள் வெளியேற்றினார்கள் 1990இல் இருந்த உத்தமன் மாஸ்டர் தகவல்!



யாழில் இருந்து சுமார் 29 வருடங்களுக்கு முன்னர் (1990) முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள். இந்த விடையம் இன்று வரை சர்ச்சையாக இருந்து வந்தது. ஆனால் விடுதலைப்புலிகள் தான் முஸ்லீம்களை யாழ் மண்ணில் இருந்து அனுப்பி வைத்தார்கள். அன்று என்ன நடந்தது தெரியுமா?

யாழ் செம்மா தெருவில் அமைந்துள்ள ஒஸ்மானியா கல்லூரிக்குப் பின்னால், விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்று அமைந்திருந்தது. அங்கே சங்கிலியன் என்னும் போராளி ஒருவர் முஸ்லிம் வீடு ஒன்றில் வழமைக்கு மாறாக சிலர் வந்து செல்வதைக்கண்டு சந்தேகமுற்றார். அவர் சென்று குறித்த வீட்டில் உள்ளவர்களை விசாரணைக்கு உட்படுத்தியவேளை அவர்கள் பெரும் பதற்றத்தோடு காணப்பட்டார்கள். இதனை அடுத்து புலிகளின் வேவுப்படை பிரிவு அங்கே சென்று விசாரணைகளை நடத்திக்கொண்டு இருக்க சோதனைப் பிரிவு சோதனைகளை நடத்த, வீட்டின் பின்புறத்தில் உள்ள கிணற்றில் இருந்து பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட நிலையில் ஆயுதங்கள் மீட்கப் பட்டது.

1990 களில் யாழ்ப்பாணத்திற்கு பொருளாதாரத் தடை இருந்தது. அதாவது உணவுப் பொருட்களை மட்டுமே கொழும்பில் இருந்து யாழ் கொண்டு செல்ல முடியும். அந்த வேலைகளில் லாரி உரிமையாளர்களாக இருந்த பல முஸ்லீம்கள் கொடிகட்டிப் பறந்தார்கள். அதிலும் முபீன் என்னும் பெரும் செல்வந்தரிடம் 40க்கும் அதிகமான லாரிகள் இருந்தது. இவர் உணவு பொருட்களை யாழ் கொண்டு வரும் வேளை. சிங்கள அரசு கொடுத்துவிட்ட பெருந்தொகையான ஆயுதங் களையும் கொண்டு வந்து யாழில் பல முஸ்லீம்களிடம் கொடுத்து அதனை மறைவாக வைத்திருக்க சொல்லி இருந்தார். ஏன் எதற்கு என்று சொல்லவில்லை.

இதனை கண்டறிந்த புலிகள் சகல வீடுகளையும் சோதனை போட்டு பெரும் தொகையிலான ஆயுதங் களை மீட்டார்கள். உடனே புலிகளின் மத்திய குழு கூடி ஒரு முடிவை எட்டினார்கள். அது அதிர்ச்சியான முடிவுதான். யாழில் இருந்து முஸ்லீம்களை மனித நேயத்தோடு அனுப்பி வைப்பது. அவர்கள், தமது உடமைகளை எடுத்துச்சொல்லாம். வீடுகள், வியாபார நிலையங்கள் மற்றும் காணிகளை விடுதலைப்புலிகள் பாதுகாப்பார்கள். மீண்டும் வரும்போது கையளிக்கப் படும். இதுவே எட்டப்பட்ட முடிவு. அதனை சுட்டறிக் கையாக அச்சடித்து உடனே அனைத்து முஸ்லீம் மதத் தலைவர்களிடம் கொடுத்தார்கள். வழி அனுப்பி வைத்தார்கள்.

நாங்கள் உயிரைக்கொடுத்து சிங்களவனிடம் இருந்து, எமக்கான உரிமை வேண்டும். தனி அரசு ஒன்று அமைந்தால் தான் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியும் என்று போராடுகிறோம். போராட்டத்தில் எங்களுக்கு உதவி செய்ய வேண்டாம். காட்டிக்கொடுத் தாலும் பரவாயில்லை. ஆனால் நீங்கள், ஆமி காரன் முன்னேறி வந்தால், வந்த ஆமிக்காரனுக்கு ஆயுத சப்பிளை செய்ய ஆயுதங்களை இப்பவே தயார் செய்து வைத்திருக்கிறீர்கள். எங்கள் போராட்டத்தை அதள பாதாளத்தில் தள்ளப் பார்க்கிறீர்கள். உங்களில் நல்லவர் யார்? கெட்டவர் யார் என்று நாம் விவாதிக்க வரவில்லை. எனவே நீங்கள் போரில் இறக்காமல் இருக்கவும், பாதுகாப்பாக இருக்கவுமே உங்களை நாம் அனுப்பி வைக்கிறோம் என்று மதிப்போடு கூறி மனித நேயத்தோடு அனுப்பி வைத்தார்கள் புலிகள்.

இன்று யாழில் குண்டு வெடிக்கவில்லையே...அன்று புலிகள் எடுத்த முடிவு. இன்று இதனை எத்தனை பேர் சரி என்று சொல்கி றார்கள். அன்று எதிர்த்தவர்கள் கூட இன்று மனம் மாறியுள்ளார்களே...இதுவே புலி களுக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றியாகும். •

# பெரியார் மண்

இராமனை செருப்பாலடித்த தி.க.ஆதரித்த தி.மு.க. தானே வரலாறு காணாத வெற்றி பெற்றது.

அட கூறு கெட்ட 'குமுதமே'


'குமுதம்' இதழ் இப்படியொரு கார்ட்டூனை வெளியிட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் அத்தி மரக்கட் டையை வைத்துப் பொம்மை விளையாட்டு விளை யாடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு குடியரசுத் தலைவரும், பிரதமரும் வருகின்றார்கள். ஊடகங்கள் ஊதிப் பெருக்கி செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

அத்திவரதரை தரிசித்து விட்டுச் சென்ற செட்டித் தாங்கல் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் சாலை விபத்தில் பரிதாபமாக பலியானார்களே இது பற்றியெல்லாம் இந்தக் குமுதங்களின் கண்களுக்குத் தெரியாதா?

வரதராஜபெருமாள் கோயில் சன்னதியில் பட்டப் பகலில் கோயில் மேலாளர் சங்கரராமன் வெட்டிக் கொல்லப்பட்டாரே, அதன் காரணமாக சங்கராச் சாரியார் செயேந்திர சரசுவதி சிறைக்குப் போனாரே நினைவில்லையா? என்ன செய்தார் வரதராசர்?

கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுவது போல, ஒரு பிற்படுத்தப்பட்டவரால் தொடங்கப்பட்ட ஒரு இதழ் பார்ப்பன ஆதிக்கத்தின் கைகளுக்குள் சென்ற நிலையில் பார்ப்பனீயத்தை வளர்க்கும் இது போன்ற மூடத்தனங்களை மூட்டை மூட்டையாக அவிழ்த்துக் கொட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

குமுதத்துக்கும், அத்திமரக் கட்டைக்கும் வக்காலத்து வாங்கும் கூட்டத்திற்கு ஒரே ஒரு சவால்.



**கவிஞர் கலி.பூங்குன்றன்**

**ஆன்மிகம், கல்வி உரிமையைக் கொடுக்கவில்லை. தீண்டாமையை ஒழிக்கவில்லை. தந்தை பெரியாரின் நாத்திகம்தான் இவற்றைக் கொடுத்தது என்பதை மறந்து விட்டு அல்லது மறைத்து விட்டு - மக்களைப் பிறப்பின் அடிப்படையில் இழிவுபடுத்தி அடிமைப் படுத்தும் ஆன்மிகத்துக்கு ஆலவட்டம் சுற்றுவது நாட்டை மீண்டும் ஆரியத்துக்கு அடி பணியச் செய்வதுதானே.**

அந்த அத்திமர வரதரை யார் உதவியும் இல்லாமல் ஒரே ஒரு முறை எழுந்து உட்காரச் சொல்லுங்கள் பார்க்கலாம்! சவால்! சவால்!

ஒரு பொம்மையை வைத்து இப்படியும் ஒரு பிழைப்பா? வெட்கக்கேடு!

பக்தி என்ற போதையில் சிக்கித் தவிப்பவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாலேயே, அதுதான் உயர்ந்தது என்று எடுத்துக் கொள்ள முடியுமா?

நோயாளிகள் பெருத்து விட்டதால் மருத்துவத் துறை தோற்றுவிட்டது. மருத்துவமனை களை இழுத்து மூடி விடலாம் என்று சொல்லும் மடையர் களுக்கும் இந்தக் குமுதம் கூமுட்டைகளுக்கும் என்ன வேறுபாடு?

நடந்து முடிந்த தேர்தலில் பக்திமயமான, இராமனைத் துணை கொண்ட பிசேபி தமிழ் நாட்டில் மண்ணைக் கவ்வியதே! இது எதைக் காட்டுகிறது? தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் கூறிய கவிப்பேரரசு மானமிகு வைரமுத்து அவர்கள் ஒரு கேள்விக்கு அழகாகப் பதில் சொன்னாரே!

“இது பெரியார் மண்ணா? ஆன்மிக மண்ணா?“ என்பதுதான் அந்தக் கேள்வி. ‘நடந்து முடிந்த தேர்தல் பதில் கூறி விட்டது’ என்று அழகாக நளினமாகப் பதில் கூறினாரே கவிப்பேரரசு. அப்பொழுது கூட உரைக்காதா?

1971 தேர்தலில் இராமனை செருப்பாலடித்த தி.க.ஆதரிக்கிற திமுகவுக்கா ஓட்டு என்று இந்தக் கூட்டம் அடைமழைப் பிரச்சாரம் செய்ததே தேர்தல் முடிவு என்ன சொன்னது?

‘இராமனை செருப்பாலடித்த’ தி.க. ஆதரித்த தி.மு.க. தானே வரலாறு காணாத வெற்றி பெற்றது. 1967 தேர்தலில் 138 இடங்கள் என்றால் இந்த 1971ஆம் ஆண்டு தேர்தலில் 184 இடங்களில் வெற்றி பெற்றதே!

“இந்த நாடு ஆஸ்திகர்கள் வாழத் தகுதி இழந்து விட்டது“ என்று ராசாசி கையொப்பமிட்டு கல்கியில் எழுதினாரே! ஒப்புக் கொண்டாரே!

நாங்கள் நினைத்தால் ராமன் தலையில் பெரியார் காலடி வைத்து மிதிப்பதுபோல கார்ட்டூன் போட முடியாதா? நாகரிகம் கருதி அவ்வாறு வெளியிட வில்லை.

தலை எழுத்தை நம்பி தாழ்ந்து கிடந்த மக்களின் தலையில் (மூளையில்) பகுத்தறிவு ஒளியூட்டி தன்மானந் தழைக்கச் செய்த தலைவரை அசிங்கப் படுத்துபவர்கள்தான் அசிங்கப்படுவார்கள்.

ஆன்மிகம், கல்வி உரிமையைக் கொடுக்கவில்லை. தீண்டாமையை ஒழிக்கவில்லை. தந்தை பெரியாரின் நாத்திகம்தான் இவற்றைக் கொடுத்தது என்பதை மறந்து விட்டு அல்லது மறைத்து விட்டு மக்களைப் பிறப்பின் அடிப்படையில் இழிவுபடுத்தி அடிமைப் படுத்தும் ஆன்மிகத்துக்கு ஆலவட்டம் சுற்றுவது நாட்டை மீண்டும் ஆரியத்துக்கு அடி பணியச் செய்வதுதானே.


கும்பகோணம் மகா மகக் குளத்தில் மகம் முடிந்த நிலையில், அந்த குளத்துத் தண்ணீரை ஆய்வுக்கு அனுப்பி தஞ்சை மாவட்ட ஆட்சியர் அதன் முடிவை வெளியிட்டாரே நினைவிருக்கிறதா?

அந்நீரில் 25 விழுக்காடு மலக்கழிவும் 40 விழுக்காடு மூத்திரக் கழிவும் இருந்ததாக வெளியிட்டாரே அவர் என்ன திராவிடர் கழகத்துக்காரரா?

மலமும் மூத்திரமும் கொப்பளிக்கும் நீரைக் குடிக்கும் பக்தி முற்றிய மக்கள் அதிகம் என்பதால் அதுதான் அறிவானது சிறந்தது என்று ‘குமுதம்’ கூறுகிறதா? என்ன பந்தயம் கட்டுகிறாய்... மலத்தைத் தொட்டுக் கொண்டுதான் சாப்பிடுவேன் என்பவர் களை எது கொண்டு திருத்த? வெட்கக்கேடு! ●

# அறிவுசார் சொத்துரிமை

**ரா. ராஜ்குமார்,** உதவிப் பேராசிரியர்,
தனியார் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், சென்னை.



சுற்றுச்சுவர் எழுப்பி எப்படி நம் வீட்டைப் பாதுகாக்கிறோமோ அதேபோல நமக்குத் தோன்றும் புதிய புதிய சிந்தனைகளை பாதுகாக்கவும் சட்டம் உள்ளது. இந்தச் சட்டத்தின் பெயர் அறிவுசார் காப்புரிமைச் சட்டம். ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியே இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் இந்தச் சட்டத்தை முழுமையாகப் பயன்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்து கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை காப்புரிமைச் சட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு குறைந்தே காணப்படுகிறது. அறிவுசார் படைப்புகள், புத்தகங்கள், புதிய டிசைன், புதிய கண்டுபிடிப்புக்கு வேண்டிய உரிமம் இந்தச் சட்டத்தின்மூலம் பெறலாம். சர்வதேச அளவில் புதிய கண்டுபிடிப்பு என்பதற்கு சில வரையறைகள் பின்பற்றப்படுகின்றன. முதலில் கண்டுபிடிப்பு தனித்தன்மையுடன் இருக்க வேண்டும். இதுவரை யாரும் கண்டு பிடிக்காததாக இருக்க வேண்டும்.

இந்தக் கண்டுபிடிப்பால் பயன் இருக்க வேண்டும். எந்தக் கண்டுபிடிப்பாக இருந்தாலும் இருபது ஆண்டு வரை மட்டுமே காப்புரிமை வழங்கப்படும். அதற்குப் பிறகு பொதுப்பயன்பாட்டிற்கு வந்துவிடும். கண்டு பிடிப்பாளர்கள் தனியாகவோ, குழுவாகவோ அல்லது நிறுவனம் பெயரிலோ தங்கள் கண்டு பிடிப்புகளுக்கு அறிவுசார் காப்புரிமை வேண்டி விண்ணப்பிக்க முடியும். இந்த முறையையே அனைத்து நாடுகளும் பின்பற்றுகின்றன. கண்டுபிடிப்பாளரைத் தவிர வேறு யாரும் இதில் உரிமை கொண்டாட முடியாது. வணிக நிறுவனங்கள் யாரேனும் கண்டு பிடித்த கண்டு பிடிப்பை தயாரித்து சந்தைப்படுத்தி லாபம் ஈட்டும் பட்சத்தில் லாபத்தில் ஒரு தொகையை கண்டுபிடிப்பாளர்களிடம் கொடுத்தே ஆக வேண்டும். குறைந்த பட்சமாக ஒரு விழுக்காட்டில் ஆரம்பித்து 50 விழுக்காடு வரை வணிக நிறுவனம் ஈட்டும் லாபத்தில் கண்டு பிடிப்பாளர் பங்குத் தொகை கொடுத்தே ஆக வேண்டும். ஒன்றிற்கும் அதிகமான புதிய கண்டுடிப்புகளுக்கு ஒருவரே காப்புரிமை பெற முடியும்.

அமெரிக்காவைச் சார்ந்த அறிவியல் வல்லுனரான தாமஸ் ஆல்வா எடிசன் ஆயிரத்து தொன்னூற்று மூன்று கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெற்றுள்ளார். ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சுன்பையமாசகி தனியாகவும், குழுவாகவும் இது வரை 5,460 கண்டு பிடிப்புகளுக்கு அறிவுசார் காப்புரிமை பெற்றுள்ளார். உலகத்திலேயே அதிக காப்புரிமை கொண்டவர்.

**அமெரிக்காவின் சிலிக்கான் பள்ளத்தாக்கு போன்று இந்தியாவில் "மேக் இன் இந்தியா" போன்ற திட்டங்கள் மூலம் அறிவுசார் காப்புரிமை பெற்றவர்களுக்கு தொழில் நிறுவனங்கள் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்தியர்களுக்கு படைப்பாற்றல் அதிகம் இருந்தாலும் அறிவுசார் பட்டத்தைப் பயன் படுத்துவதில் அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை.**

ட்ரான்சிஸ்டர், எல்இடி கணினித்திரை, சோலார் சாதனம் என்று பல. இவர் கண்டுபிடித்த பொருட் களை உற்பத்தி செய்து ஆயிரக்கணக்கான நிறுவனங் கள் லட்சக்கணக்கானோருக்கு வேலை வாய்பை வழங்கி வருகின்றன. அறிவியல் கண்டுபிடிப்பு களால் மக்களுக்கு பல நன்மைகள் நடந்தாலும் சில தீமை களும் இருக்கத்தான் செய்கின்றன. சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஆல்பிரட் நோபல் என்பவர் டைனமைட் என்னும் வேதியியல் பொருளைக் கண்டுபிடித்தார். அறிவுசார் சட்டக் காப்புரிமை மூலம் பெரும் தொகை யினை ராணுவம் வாரி வழங்கினாலும் இவருக்கு மனது உறுத்தியது.

அப்போதே இந்திய மதிப்பில், ரூ. 22 கோடி மதிப்பிலான சொத்துகள் அவருக்கு இருந்தன. அவர் இறக்கும் தருவாயில் அவரின் விருப்பத்தை உயிலாக எழுதி வைத்தார். இவர் இறந்த பிறகு தலைப்புச் செய்தியாக "பல மக்கள் இறக்கக் காரணமானவர் இறந்தார்" என பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. நோபல் எழுதி வைத்த உயிலை அப்போது அவர் குடும்பத்தினர் வெளியிட்டனர். அதன்படி அவரின் சொத்தில் 94 விழுக்காடு அறிவியல் துறைகளில் சாதிப்பவர்களுக்கு, இலக்கியம், இயற்பியல், வேதியியல், மருத்துவ அறிவியல், அமைதி மற்றும் பொருளா தாரத்தில் உலக அளவில் சாதித்த நிபுணர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இது அனைத்திற்கும் நோபல் அறிவுசார் சொத்துரிமையே மூல காரணம்.

அமெரிக்காவின் சிலிக்கான் பள்ளத்தாக்கு போன்று இந்தியாவில் "மேக் இன் இந்தியா" போன்ற திட்டங்கள் மூலம் அறிவுசார் காப்புரிமை பெற்றவர்களுக்கு தொழில் நிறுவனங்கள் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்தியர்களுக்கு படைப்பாற்றல் அதிகம் இருந்தாலும் அறிவுசார் பட்டத்தைப் பயன் படுத்துவதில் அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை. இதனால், இந்தியா பல இக்கட்டான சூழ்நிலைகளைச் சந்தித்துள்ளது. நம் முன்னோர்கள் கண்டுபிடித்த பாரம்பரிய முறைகளுக்கு மற்றொரு நாட்டில் காப்புரிமை வழங்கி இருப்பின் இந்திய நாடு தகுந்த ஆதாரங்களைக் காட்டி அங்கு கொடுக்கப்பட்ட காப்புரிமையை நிரந்தரமாக ரத்து செய்யலாம்.

ஒருமுறை இரு அமெரிக்க வாழ் இந்தியர்கள் மஞ்சள், காயங்களை ஆற்றும் என கண்டுபிடித்துள்ள தாகக் கூறி காப்புரிமை பெற்றனர். இதை எதிர்த்து இந்திய தொழில்துறை ஆராய்ச்சி மற்றும் மருத்தவக் கழகம் "பழங்காலக்கலை" என்ற அடிப்படையில் ஆதாரங்களுடன் வாதிட்டதால் மஞ்சளுக்கான அமெரிக்க காப்புரிமை ரத்து செய்யப்பட்டது.


ஐரோப்பிய காப்புரிமை நிறுவனம் அமெரிக்கா வைச் சேர்ந்த யுஎஸ்டிஏ என்ற உர நிறுவனத்திற்கு வேம்பின் கொட்டையிலிருந்து பூஞ்சாணக்கொல்லி தயாரிக்கும் முறைக்கு உரிமம் வழங்கியது. பாரம்பரிய முறையை ஆதாரங்களுடன் வாதிட்டதால் இந்திய அரசு வெற்றி கண்டது. அமெரிக்க காப்புரிமை நிறுவனம் டெக்ஸ்மதி என்னும் நெல்லுக்கு காப்புரிமை அளித்தது. டெக்ஸ்மதி என்னும் ரகம் பதினாறு உரிமைகளில் இந்திய பாஸ்மதியை ஒத்தது. ஆனால் போதிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியாமல் பாஸ்மதி "அரோமா பாசுமதி" என்ற பெயரில் அமெரிக்க நிறுவனத்திடம்தான் காப்புரிமை உள்ளது. இதனால், இந்திய விவசாயிகள் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்வதில் சிக்கல் நீடிக்கிறது.

மதுர மல்லி, திருநெல்வேலி அல்வா, காஞ்சிப் பட்டு, இது போல புவியியல் சார்ந்த வணிகளப் பொருட்களை பழமை மாறாமல் குறிப்பிட்ட இடத்தில் இருந்து மட்டுமே விற்க அறிவுசார் சொத்துரிமை வழிவகுக்கிறது.

இந்தியாவில் உள்ள 85 விழுக்காடு பொருட் களுக்கு சர்வதேச நிறுவனங்கள் காப்புரிமை பெற்று வருகின்றன. இந்நிலை தொடர்ந்தால் சில நூறு ரூபாய்க்கு விற்கப்படும் பொருட்கள் ஆயிரங்களைத் தாண்டும். ஏனெனில், சர்வதேச காப்புரிமைச் சட்டப் படி கண்டுபிடிப்பு நிறுவனங்களுக்கு ஒரு பெரும் தொகை சென்ற பின்னர் தான் பொருட்கள் சந்தைக்கு வரும். ஆயுர்வேத மருத்துவ முறைகளில் பயன் படுத்தப்படும் மாதுளை, நிலவேம்பு, கீழாநெல்லி, நித்ய கல்யாணி மற்றும் பல மூலிகைகள் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் காப்புரிமை பெற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நம் பாரம்பரிய முறைகளை ஆராய்ச்சி செய்து ஆய்வு கட்டுரைகளாக சமர்ப்பிப்பதன் மூலம் நம் பாரம்பரியத்தை பாது காக்கலாம். இந்தியா உயர்கல்வி நிறுவனங்கள் அதிகம் உள்ள நாடு. ஒரு வருடத்திற்கு பல லட்சம் மாண வர்கள் பட்டம் பெறுகின்றனர். சென்னை, கொல்கத்தா, மும்பை, டெல்லி போன்ற இடத்தில் இருக்கும் இந்திய அரசின் அறிவுசார் காப்புரிமை அலுவலகத்திற்கு ஒவ்வொரு மாணவரும் ஏதோ ஒரு கண்டுபிடிப்பை நிகழ்த்தி காப்புரிமை கோரினாலே இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பன்மடங்காகப் பெருகும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

**நன்றி: தினத்தந்தி**

# பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்.ஆ?




"புதிய தேசத்தை சிறந்த ஒன்றாக உருவாக்குவதில் ஆர்.எஸ்.எஸ் பங்கு" என்ற தலைப்பில் நாக்பூர் பல் கலைக் கழகத்தில் பாடம் ஒன்று சேர்க்கப் பட்டுள்ளது. முக்கியமாக அந்த இடத்தில் இருந்த 'பொதுவுடைமை அமைப்பின் வளர்ச்சியும் எழுச்சியும்' என்ற தலைப்பில் இருந்த பாடம் நீக்கப்பட்டுதான் ஆர்.எஸ்.எஸ். பாடம் சேர்க்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. பாசக ஆட்சிக்கு வந்த பிறகு பள்ளிப் பாடத்திட்டங்களில் இருந்து கல்லூரிப் பாடங்கள் வரை காவி மயமாக மாறிக் கொண்டு வருகிறது. இதற்கு முன்பு ஆர்.எஸ். எஸ் அமைப்பு குறித்து அரசு மற்றும் அரசு சாரா கல்வி நிறுவனங்கள் பாடமாக சேர்க்கவில்லை. சேர்க்கவும் அவசியமில்லை. ஆர்.எஸ். எஸ் அதன் தோற்றம் வளர்ச்சி, அதன் செயல்பாடுகள் எப் போதுமே சர்ச்சைக்குரியவைகளாக இருந்தன.

1909 ஆம் ஆண்டிலேயே ஆங்கிலேய அரசால் இந்தியாவிற்கு சுயாட்சி உரிமை கொடுக்க வேண்டும் என்ற பேச்சு மற்றும் அதற்கான அடித்தளம் அமைக் கப்பட்டுவிட்டது. முக்கியமாக மிண்டோமார்லே சீர்திருத்தங்கள் எதிர் காலத்தில் இந்தியா இந்தியர் களின் ஆளுமைக்கு வரும் என்ற ஒரு சமிக்சையை காட்டியது. இதனை அடுத்து இந்தியாவில் ஆங்கிலே யரின் வருகைக்குப் பிறகு குறைந்து போன பார்ப்பன அதிகாரம் மீண்டும் கோலோச்ச தீவிர இந்துத்துவ அமைப்பினர் ஒன்று சேர்ந்து உருவாக் கியதே ஆர்.எஸ்.எஸ் அமைப்பு.

இது 1925 செப்டம்பர் 27ஆம் தேதி விசயதசமி அன்று கேசவ பலிராம் கேட்கேவரால் நிறுவப்பட்டது. சங்கமானது ஆரம்பிக்கப்பட்டு மக்களிடையே பிரிவினைவாதத்தை மிகவும் தீவிரமாக விதைத்த காரணத் தால் மதவாத அமைப்பாக விரை விலேயே அடையாளம் கண்டு கொள்ளப்பட்டது. இதன் முக்கியக் கொள்கை இந்து தேசியவாதம். இந்துக்களுக்கான நாடு என்பதுதான். உண்மையில் இந்துக் களுக் கான நாடு என்பது அவர்களைப் பொறுத்தவரை பார்ப் பனர்களுக்கான நாடு என்பதாகும்.

ஆர்.எஸ்.எஸ் நேரடியாக தேர் தலில் பங்கு கொள்வதில்லை. அது தனது அமைப்பில் பல்வேறு பிரிவு களை உருவாக்கி அனைத்து அரசியல் கட்சி களிலும் அந்தப்பிரிவில் உள்ள வர்களை ஊடுருவ விட்டு தனது ஆளுமையை நிலை நிறுத்தி வருகிறது. 1930 முதல் காங்கிரஸ் கட்சி வலுவாக இருந்த போது, அதன் தலைமை மதச்சார்பின்மைக் கொள் கையை கடை பிடித்த நேரத்தில் அதன் இரண்டாம் மட்டத் தலைவர் களாக தங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்களை ஊடுரு வச் செய்தனர்.

இந்திரா காந்தி அவசர நிலைக் காலத்தில் அரசமைப்பு முகப்பில் இந்தியா மதச்சார்பற்ற நாடு என்பதைச் சேர்த்தார். ஆர்.எஸ்.எஸ் இன் உறுப்பி னராக சேர எவ்வித நடைமுறையும் இல்லை. உறுப் பினர் கட்டணம், அடையாள அட்டை வழங்கப்படு வதில்லை. மதவெறி கொண்டவர்களைத் தேடிப் பிடித்து கிளைக்கு அழைத்துச் சென்று அவர்களை மூளைச்சலவை செய்து இணைத்துக் கொள்வதுதான் ஆர்.எஸ்.எஸ் இன் நடைமுறை.

இந்த அமைப்பின் தலைவராக சித்பவன் பார்ப்ப னர்கள் மட்டுமே இருந்து வருகின்றனர். காந்தியைக் கொன்ற நாதுராம் கோட்சேவும் சித்பவன் பார்ப்பனர் என்பதும், அவரும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் முக்கிய நபராக இருந்தவர் என்பதும் அவர் நாக்பூரில் கோல்வால்கர், சாவர்கர் போன்றவர்களை அடிக்கடி சந்தித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட

அமைப்பிற்கு மாணவர்கள் கற்றுக் கொள்ளும் அளவிற்கு எந்த ஒரு நன்னெறி அல்லது எதிர்கால தொலைநோக்குத் திட்டங்கள் எதுவுமே இல்லை. ராட்டிரசந்த் துகடோஜி மகாராஜ் பல்கலைக்கழக மானது பி.ஏ., இரண்டாம் ஆண்டு பாடப்புத்தகத்தில் தேசத்தை "கட்டமைப்பதில் ஆர்.எஸ்.எஸ் பங்கு" என்ற தலைப்பிலான பாடத்தைச் சேர்த்துள்ளது.

அதுவும் அந்தப் பகுதியில் இருந்த 'பொதுவுடைமை அமைப்புகளின் வளர்ச்சியும் எழுச்சியும்' என்ற பாடத்தை நீக்கிவிட்டு சேர்த்துள்ளது. அப்பல்கலைக் கழகத்தின் இந்த நடவடிக்கைக்கு காங்கிரசு உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஆனால், நாக்பூர் பல்கலைக் கழகமோ வரலாற்றின் போக்குகளை மாணவர்கள் அறிந்து கொள்ளத்தான் இந்தப் பாடம் என்கிறது. இது தொடர்பாக கருத்து தெரிவித்த மகாராட்டிரா காங்கிரசு தலைவர் அசோக் சவான் கூறியுள்ளதாவது, "தேசத்தின் விடுதலைக்காக ஆர்.எஸ். எஸ் என்ன பங்களிப்புச் செய்தது? ஆர்.எஸ். எஸ் சித்தாந்தத்தை திணிக்கும் முயற்சிதான் இது. ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை மாணவர்கள் படிக்க வேண்டும் என்று விரும்புகிற அந்தப் பல்கலைக் கழகம் அதே ஆர்.எஸ்.எஸ். இயக்கம் 3 முறை ஏன் தடை செய்யப்பட்டது என்பதையும் மாணவர்களுக்குக் கற்றுத் தருமா? என வினவியுள்ளார்.

நாட்டை ஆர்.எஸ்.எஸ். என்ற வன்முறைக் குடை யின் கீழ் கொண்டு வரத் துடிக்கிறார்கள் எச்சரிக்கை! ●

## அவசியம் கடைபிடிக்க வேண்டிய ஆரோக்கிய குறிப்புகள்...!!!

Dr. Gouse (Raja), MD (Tcm, Acu)., Singapore.

ஆரோக்கியம் என்பது நோய் வந்தபின் குணப்படுத்திக் கொள்வதல்ல. நோய்கள் வராமல் உடலை தற்காத்து கொள்வதே ஆரோக்கியமாகும். அப்படிப்பட்ட ஆரோக்கியத்தை பெறுவது எப்படி?

1. பசிக்கும்போது மட்டும் சாப்பிடுங்கள், தாகமெடுத்தால் தண்ணீர் குடியுங்கள். பசி வேறு, தாகம் வேறு என்பதை புரிந்துக்கொள்ளுங்கள். உணவோடு தண்ணீரை உட் கொண்டால் வயிற்றில் உள்ள உணவுத்துகள்கள் தண்ணீருடன் கலந்து மிதக்க ஆரம்பிக்கும். அதனால் செரிமானம் தாமதமாகும். உணவை சாப்பிட்டு விட்டு சுமார் 20 நிமிடங்கள் கழித்து தண்ணீர் அருந்துவது நல்லது.

2. பசிக்கும் போது பயமில்லாமல் உங்களுக்குப் பிடித்த எந்த உணவையும் போதுமான அளவு சாப்பிடுங்கள். பசி இருக்கும் பொழுது எந்த உணவு சாப்பிட்டாலும் அது இலகுவாக ஜீரணமாகிவிடும். உணவை நிதானமாக மென்று சாப்பிடுங்கள் டிவி பார்த்துக்கொண்டும் பேசிக்கொண்டும் சாப்பிடாதீர்கள்.

3. தரையில் அமர்ந்து சாப்பிடுங்கள். உங்கள் கை விரல்களால் சாப்பிடுங்கள். ஆரோக்கிய ரீதியாக விரல்களுக்கும் ஜீரணத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. உதாரணமாக ஒரு உணவை வெறுங்கையால் தொட்டால் அது விரைவில் கெட்டுப்போகும். அதுபோல் கையால் சாப்பிட்டால் அந்த உணவு வேகமாக சிறைந்து விரைவாக ஜீரணமாகிவிடும் கை இல்லாதவர்களுக்குத் தான் ஸ்பூன் தேவை.

4. விரும்பிய சைவ – அசைவ உணவுகளை உண்ணுங்கள். மசாலா குறைத்து, உப்பு, புளி, இனிப்பை மிதமாக சாப்பிடுங்கள்.

5. ஒரே வகை உணவையும், ஒரே சுவையுள்ள உணவையும் தொடர்ந்து சாப்பிடாதீர்கள். அவ்வப்போது அறுசுவைகளையும் கலந்து சாப்பிடுங்கள்.

6. முடிந்த அளவு இயற்கையாக விளைந்த உணவுகள் மற்றும் பழங்களை சாப்பிடுங்கள்.

7. பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்த உணவுகளையும் தவிர்த்து விடுங்கள். விளம்பரம் செய்யப்படுவதை ஒருபோதும் வாங்காதீர்கள்.

8. கடைகளில் விற்கப்படும் ஜூஸ்களையும், மற்றும் அனைத்து குளிர் பானங்களையும் அவசியம் தவிர்த்து விடுங்கள்.

9. பக்கவிளைவுகள் இல்லாத எந்த மாத்திரையும் கிடையாது. தலைவலி, ஜுரம் என்று எதற்கெடுத்தாலும் உடனே மாத்தி ரையை சாப்பிடாதீர்கள் சற்று பொறுத்திருங்கள். ஓய்வெடுங்கள், சரியாகவில்லை என்றால் பிறகு தகுந்த மருத்துவரைப் பாருங்கள்.

10. சளி, ஜுரம், ஜலதோஷம் இருக்கும் போது டீ, காஃபி, பால் போன்றவற்றை சாப்பிடாமல் இருந்தால் நோய்கள் விரைவாக குணமாகும்.

11. குறைந்தது 6 மணி நேரம் தூங்குங்கள். இரவு 10 மணிக்கு முன் தூங்கிவிடுங்கள் காலை 4 மணிக்குமேல் தூங்காதீர்கள்.

12. பள்ளி செல்லும் மாணவர்களுக்கு அவசியம் காலை உணவை கொடுத்துவிடுங்கள்.

டீ, காஃபி, பால் போன்றவற்றை கொடுத்தால் பசி அடங்கிவிடும் அதனால் அவர்கள் காலை உணவை சாப்பிடமாட்டார்கள்.

காலையில் சாப்பிடாத மாணவர்களுக்கு கவனச்சிதறல் ஏற்படும் மேலும் பார்வை கோளாறுகள் உண்டாகும்.

13. சிறுவர்களை தினமும் மாலையில் ஓடியாடி விளையாடி அனுமதியுங்கள். செல்போன் விளையாட்டையும் டிவி பார்ப்பதையும் கட்டுப்படுத்துங்கள்.

14. மாணவர்களை அதிகாலையில் படிக்க வையுங்கள். அதிகாலை நேரத்தில் படித்தால் இலகுவாக மனதில் பதிந்துவிடும்.

15. சிறுவர்களை மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை சிறுநீர் கழிக்க அறிவுறுத்துங்கள்.

16. பசிக்கும்போது மட்டுமே சாப்பிடுபவர்களுக்கு உடற்பயிற்சி தேவையில்லை. ரிலாக்ஸாக நடைப்பயிற்சி செய்வதே சிறந்த உடற்பயிற்சியாகும்.

17. குடலில் மலம் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் உண்ணும் உணவில் அரைப்பகுதியாவது தினமும் மலமாக வெளியேறிவிட வேண்டும்.

# நம்ம ஊர் கபிலர் குன்று பெருமையை தெரிந்துகொள்வோம்!

பெயர்: **கபிலர் குன்று**

இடம் : திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம்

அங்கவை - சங்கவை

அங்கவை, சங்கவை கேலிப்பெயர்கள் அல்ல. அவர்கள் அறிவும், மானமும் மிக்க சங்கப்புலவர்கள் என்பதை நினைவில் கொள்க...

**வரலாறு**

வரலாறு எத்தனையோ விசயங்களை நமக்குச் சொல்லுகிறது. நாம் நாயகர்களாகப் பார்க்கும் எத்தனையோ பேருக்கு முகத்தில் அறையும் ஒரு கருப்பு சரித்திரம் உண்டு. நம்மால் கொண்டாடப்படுகிற மூவேந்தர்கள் (சேர, சோழ, பாண்டிய மன்னர்கள்) எப்படி ஒரு குறு நில மன்னனின் முதுகில் குத்தினர் என்பது பற்றிய கதையே இது.


அது மூவேந்தர்கள் கொடி கட்டிப்பறந்த காலம். தென் தமிழ்நாடு முழுக்க அவர்கள் வைத்ததே சட்டம். அவர்களுக்கே முதல் மரியாதை அப்போது பறம்பு நாட்டை ஆண்டவன் பாரி. வேளிர் குலத்தவன். மூவேந்தர்கள் போலவே சங்ககாலம் முதலாக ஆட்சி செய்யும் குலம்தான். ஆனாலும் மூவேந்தர்களுக்கு பாரியின் மீது ஒரு பொறாமை அவன் கடையெழு வள்ளல்களில் ஒருவனாகப் பாடப்பட்டவன் எல்லாப் புலவர்களும் அவனைப் பற்றியே பாடிக்கொண்டு இருந்தனர். இது போதாதா பகைமைத் தீயை வளர்க்க? மூவேந்தர்கள் நாடு முழுக்க ஆண்டார்கள். பாரி 300 கிராமங்களைக் கொண்ட நாடான பறம்பு நாட்டு மன்னன். அவனுக்கு இவ்வளவு புகழா?

தமக்குள் அடித்துக்கொண்டிருந்த மூவேந்தர்கள் பாரியை ஒழிக்க ஒன்று சேர்ந்தனர். பல்வேறு சூழ்ச்சிகள் செய்து அவனை அழிக்க திட்டமிட்டுக் கொண் ருந்தனர். பாரிக்கு இரண்டு மகள்கள், அங்கவை, சங்கவை, அழகும் அறிவும் நிரம்பப் பெற்ற வர்கள். பாரியைப்போன்றே ஈகை குணம் கொண்ட வர்கள். மூவேந்தர்கள் மூவரும் பாரியிடம் சென்று பெண் கேட்டனர். அவர்கள் மூவருக்கும் பட்டத்து ராணி களும் உண்டு. இருந்தாலும் அந்த இரண்டு பெண் களைக் கேட்டனர். பாரி மறுத்தார். இதற்காகவே காத்து இருந்த மூவேந் தர்கள் பறம்பு நாட்டின் மீது போர் தொடுத்தனர். கோட்டையைச் சுற்றி முற்றுகை இட்டனர். நாட்கள் தான் போனதே தவிர கோட்டை யைப் பிடிக்க முடிய வில்லை. ஆனால் நாட்டு மக்கள் அவதிப்பட ஆரம்பித்தினர்.

சங்கப்புலவர் கபிலர், பாரியின் உற்ற நண்பர். அவர் பாரியின் சார்பாக மூவேந்தர்களை சந்தித்து போரை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். பாரியின் பெருமையை எடுத்துக்கூறினார். அப்படிக் கூறும்போது, 'பாரி, புலவர்கள் கேட்டால் நாட்டையே கொடுத்து விடுவார்' என்று ஒரு வாக்கியம் சொல்லுகிறார். பொறி தட்டியது மூவேந்தர்களுக்கு, புலவர்கள் போல வேடம் இட்டுக்கொண்டு பாரியின் கோட்டைக்குள் சென்று பாரியைச் சூழ்ந்து, கொன்று விடுகின்றனர். நாட்டை எடுத்துக்கொண்டு பாரி மகளிரை அரசவையில் வைத்து, அவமானப்படுத்தி வெளியே துரத்தி விட்டனர். கபிலர் மனமுடைந்து போகிறார். பாரி மகளிரை மனதில் கொண்டு அவர்களுடன் நாட்டை விட்டு வெளியேறினார்.

அடுத்து நடந்ததுதான் இன்னும் கொடுமை மூவேந்தர்களுக்கு பயந்து எந்த குறு நில மன்னர்களும் பாரி மகளிரை மணம் புரிய முன் வரவில்லை. பாரியின் நண்பர்களோ எந்த உதவியும் செய்ய வில்லை. அந்த அளவிற்கு மூவேந் தர்கள். தடுத்து நிறுத்தினர். ஒரு சங்கத் தமிழ்க்கவிஞன், நாடு நாடாகப் போய், பாரி மகளிருக்காக கையேந் தினார்.

கடைசியில் திருக்கோ யிலூர் மலையமான் காரி துனிந்து முன் வந்து அங்கவையை மணம் புரிந்தான். மீண்டும் வந்த மூவேந்தர்கள் அவனைச் சூழ்ந்து கொன்றார்கள்!



அங்கவை தீக்குளித்து இறந்து போகிறாள். சங்கவையைச் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்து விட்டு, அதே திருக்கோயிலூரில், கபிலர் வடக்கிருந்து தற்கொலை செய்து கொண்டார். இன்றும் தென்பெண்ணை ஆற்றில் கபிலர் குன்றைக் காணலாம்.

இந்த கதை தெரிந்தால்தான் பாரி மகளிர் பாடிய இந்த புறநானூறு பாட்டின் அர்த்தம் விளங்கும் இதோ அந்த பாடல்:

"அற்றைத் திங்கள் அவ்வெண்நிலவில்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்நிலவில்
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே!"

**நூல் : புறநானூறு (112)**

பாடியவர் : **பாரி மகளிர்**

சூழல் : **பொதுவியல் திணை, கையறு நிலை**

ஐந்தே வரிகள்தான். அன்று வந்ததும் இதே நிலாதான். ஆனால், அப்போது எங்கள் தந்தை எங்களுடன் இருந்தார். எங்கள் குன்றிலும் பிறர் ஆக்கிரமிக்கவில்லை இன்றைக்கு வந்திருப்பதும் அதே நிலாதான். இப்போது வெற்றி ஒலி செய்யும் முரசைக் கொண்ட மூவேந்தர்கள் எங்கள் குன்றைக் கைப்பற்றிக் கொண்டார்கள். நாங்கள் எங்கள் தந்தையையும் இழந்துவிட்டோம்.

மேலோட்டமாகப் படித்தால் சாதாரணமான பாடல்தான். ஆனால் அற்றைத் திங்கள். இற்றைத் திங்கள் என்று இரண்டு ராப்பொழுதுகளுக்கு நடுவே தங்கள் வாழ்க்கை தலைகீழாகப் புரட்டிப் போடப் பட்டு விட்ட நிலைமையை ஐந்தே வரிகளில் எத்தனை அழகாக சொல்லி விடுகிறார்கள் பாருங்கள்.

# எளிய மருத்துவம்



இரவில் மூக்கடைப்புக்கு மின் விசிறியின் நேர் கீழே படுக்க வேண்டாம். சற்று உயரமான தலையணை பயன் படுத்தவும். மல்லாந்து படுக்கும்போது மூக்கடைப்பு அதிக மாகும். பக்கவாட்டில் படுக்கவும். காலையில் பல் தேய்க்கும் போது நாக்கு வழித்து விட்டு மூன்று முறை மூக்கைச் சிந்தவும். சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்த நமது முன்னோர் காட்டிய வழி இது.

வெண்டைக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவதுடன் நல்ல ஞாபக சக்தியையும் உண்டாகும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் சேர்த்து தண்ணீரில் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம்

வெள்ளைப் பூசனிக்காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், கொத்துமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப் பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் ரத்தக் கொதிப்பு, கொலஸ்ட்ரால் தலைசுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.

கை சுளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளும், கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத்துச் சுளுக்கு உள்ள இடத்தின் மீது போடுங்கள். அல்லது டர்ப்பன்டைன் எண்ணெயைத் தடவினாலும் சுளுக்கு விட்டு விடும்.

அருகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும். உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.

புடலங்காயின் இலைச்சாறு, காலையில் குழந்தைகளுக்குத் தருவதால் கக்குவான், இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும். புடலங்காய் சமைத்து உண்பதால் தேவையில்லாத உடல் பருமன் குறையலாம்

கேரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும். எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.

நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். எள், எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைந்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# பரவ செய்வீர் புத்தகங்களை!

## அறிவோம்! விரிவோம் உறவீர்!

பன்மை வெளி

## தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்




கற்பனை சிறகு விரிக்க...
கடல் கன்னி ரூ.50.00

பாடலோடு பயனும் அறிய...
சித்தர் பாடல்களும் சித்த மருத்துவமும் ரூ. 130.00

நம்மின்கலையறிய...
தமிழர் இசை - நாடகம் - திரைப்படம் ரூ.150.00

நம்மின் அறிவியல் அறிய...
தமிழர் அறிவியல் மரபு ரூ.100.00

வாழ்வையும் வாழ்விற்கான மருத்துவத்தையும் அறிய...
தமிழர் வாழ்வியலும் மருத்துவமும் ரூ.120.00

வாழ்வை வழிநடத்த...
பழமொழிகளும் வாழ்வியலும் ரூ.100.00

முன்னோர்கள் தண்ணீரை கையாண்ட மேன்மையறிய...
தமிழர் நீர் மேலாண்மை ரூ.100.00

பெரியோர் பெருமையறிய
தமிழ வள்ளலார் ரூ. 100.00

இருக்கும் வீட்டில் இயற்கை வேளாண்மை செய்ய...
மாடித் தோட்டம் ரூ. 50.00

பிள்ளை பாடல்களுக்கு...
மழையாட்டம் ரூ. 80.00

கல்வி திட்டங்களுக்கு பின்னுள்ள அரசியல் அறிய..
கல்வி அரசியல் ரூ. 150.00

நடந்தது - நடப்பது நடக்க வேண்டியதறிய...
சூழலியல் - அரசியல் - பொருளியல் ரூ. 150.00

மொழிகள் அறிய...
தமிழ்மொழித் தொன்மை ரூ. 125.00




மொத்த நூல்களின் விலை ரூ. 1405/- கழிவு விலையில் ரூ.1000/- மட்டுமே

இன்னும்.. இன்னும்... இருக்கிறது
அறிய.. அறிய.. அது நம்மை விரிக்கிறது..!

பேச: 98408 48594, 99941 41416

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

